உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 28 ] சௌமிய - ஆடி - 10—8—69 [ இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## பரமாய மூர்த்தி

பொருள்களின் இயல்புகளில், 'எண்' என்பது ஒன்று. அஃது, 'ஒருமை, பன்மை' என இருவகைத்து. ஒருமை - ஒன்ருய் இருக்கும் தன்மை. பன்மை - பலவாய் இருக்கும் தன்மை. பொருளின் வகைகளில் ஒவ்வொன்றும் வகையால் ஒன்ருயினும், விரியாற் பலவாம். எடுத்துக்காட்டாக, உலகிற்கு முதலாகிய, 'பூதம்' என்பது வகையால் ஒன்ருயினும், நிலம், நீர், தீ, காற்று, வானம் என விரியால் ஐந்தாகும். 'கோள்' என்பது வகையால் ஒன்ருயினும், ஞாயிறு, திங்கள் முதலாக விரியால்

ஒன்பது என்பது பண்டைக் கொள்கை. இக்காலத்தார் மேலும் பல கூறுவர். 'நாண்மீன்' என்பது வகையால் ஒன்ருயினும், அசுவனி, பரணி முதலாக விரியால் இருபத்தேழு. 'விண்மீன்' என்பது வகையால் ஒன்ருயினும், விரியால் எண்ணிறந்தன. இவ்வாறே ஒவ்வொரு பொருளையும் வகையும், விரியுமாக நோக்கி அதன் எண்ணினை உணர்தல் வேண்டும்.

வகை என்பவற்றையே மேலும் 'வகையுள் வகை, வகையுள் விரி' எனப் பகுத்துக் கணக்கிடுமாறும், பின்னும் அவற்றை அவ்வாறே மும்முறை பகுத்துக் கணக்கிடுமாறும் பொருட் பன்மைகள் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, 'எழுத்து' என்பது வகையால் ஒன்ருயினும், முதலெழுத்து, சார்பெழுத்து என வகையுள் வகையால் இரண்டாகின்றது. உயிரெழுத்து, மெய்யெழுத்து, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என வகையுள் விரியால் ஐந்தாகின்றது. இவ்வாறே குறில் ஐந்து, நெடில் ஏழு, வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடையினம் ஆறு எனப் பகுத்து விரித்தால் பற்பல வகையாய் விரிந்து பலவாகும். இதனுல் எல்லாப் பொருளும் வகையால் ஒன்ருயினும் விரியாற் பலவாதல் விளங்குகின்றது. ஆயினும் விரியானும் பலவாகாது ஒன்றேயாய் நிற்கும் பொருள் இறைவன் ஒருவனே. அதனுல், திருமூலர் தமது முதல் திருமந்திரத்துள், "ஒன்றவன் ருனே" என்று அருளிச்செய்தார். இவ்வாறு இறைவனது ஒன்ருயிருக்கும் தன்மையையே திருவள்ளுவர், "தனக்குவமை இல்லாதான்" என்று கூறினர். இங்கு 'உவமை' என்றது ஒரு நிகர்த்தாய் வகையால் ஒன்றெனப்படும் பொருளையேயாம். எனவே, 'பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருள்களில், பசு, பாசம் என்னும் இரண்டும் வகையால் ஒன்றேயன்றி விரியால் ஒன்றன்று; பலவாம். அவற்றுள் பசு, விரியால் எண்ணிறந்தது; பாசம், விரியால் மூன்று. 'ஐந்து' என்றும் சொல்லப்படும். பதி, இவ்வாறன்றி எவ்வாற்ருனும் ஒன்றேயாம்.

பதியும், 'சொரூப சிவன், தடத்த சிவன், இலய சிவன், போக சிவன், அதிகார சிவன்' என்று பற்பலவாகின்றதன்றே எனின், அவையெல்லாம் ஒருவனே பல வேடங்கட்டி நடிப்பது போன்றனவேயன்றி வேறில்லையாதலின், அதனுல் வருவதோர் ஐயமில்லை. அஃதாவது நாடகம் வல்லான் ஒருவன் பல வேடங்களைப் புனைந்து நடிக்கக் கண்டவர்கள் அவனது உண்மை

நிலையை நினைக்கும்பொழுது அவனை ஒருவனாக உணர்தல் அல்லது பலராக உணர்தல் இல்லையன்றோ! அதுபோலத்தான் தடத்த நிலைகளை விட்டு உண்மை நிலையை எண்ணுங்கால் இறைவன் ஒருவனேயல்லது பலர் இல்லை என்பது தெளிவாகும். இதனை இனிது உணர்த்தவே, "ஒருவனே இராவணாதி பாவகம் உற்றாற்போல" என்றார் அருணந்தி சிவாசாரியார். எனவே, பதியாகிய இறைவன் ஒருவனேயல்லது பலர் இல்லை. "ஒன்றென்றது ஒன்றேகாண்; ஒன்றே பதி" என்பது மெய்கண்டார் வாக்கு. இது பற்றியே இறைவன், 'ஏகன்' எனப்படுகின்றான்.

இறைவன், 'தனக்குவமையில்லாத தனிப்பொருள்' என்பதையே, பரம்பொருள், பரமன், என்ற சொற்களால் பெரியோர் வெளியிடுகின்றனர். இத்தகைய பரமாயமூர்த்தி சிவபெருமானே என்பதைத் தமது தசபுராணத் திருப்பதிகத்தின் முதல் திருப்பாட்டில் அவன் நஞ்சுண்ட வரலாற்றைக் கூறும் புராணப் பொருளையும், இரண்டாவது திருப்பாட்டில் மாலயனால் அடிமுடி தேடி அறியப்படாத வரலாற்றைக் கூறும் புராணப் பொருளையும் குறித்துக் காட்டும் முகத்தால் அருளிச்செய்த நாவுக்கரசர், அத்திருப்பதிகத்தின் மூன்றும் திருப்பாட்டில் மற்றொரு புராணப்பொருளைக் குறித்துக் காட்டத் தொடங்கி வேறு சில கருத்துக்களையும் உடன் அறிவுறுத்துகின்றார்.

'எல்லாப்பொருள்களும் யாவரும் காலத்திற்கு உட்பட்டிருத்தலன்றி அதனைக் கடந்திருக்கவில்லை என்பதைக் கற்பங்களின் அளவு கூறும் முகத்தால் புராணங்கள் வெளியிடுகின்றன. அம்முறையில், ஆயிரம் சதுர்யுகம் கொண்டது ஒருபகல் என்னும் முறையில் நூறு ஆண்டுகள் சென்ற பொழுது ஒரு பிரமன் மறைந்தொழிகின்ற காலம், 'பிரம கற்பம்' எனப்படும். அப் பிரமகற்பம் திருமாலுக்கு ஒரு பகல் என்று அமைவதால், அதன் முடிவில் திருமால் படைப்புக் கடவுளாகிய பிரமதேவனோடு அவனாற் படைக்கப்பட்ட உலகத்தையும் உண்டு கற்பாந்தத்தில் உண்டாகும் பிரளய வெள்ளத்தில் ஆலிலையின்மேல் சிறுகுழவிவடிவில் உறங்குவார் என்பதும், திருமாலுக்குப் பகலாய் இருந்த அத்துணைக் காலம் இரவாய்க் கழிந்தபின் மறு கற்பத் தொடக்கத்தில் அவர் விழித்தெழுந்து தமது உந்திக் கமலத்தின் வழியாக மற்றொரு பிரமனை

உண்டாக்க, அவன் முன்போல உலகத்தைப் பல்லூழிகாலம் படைத்து வாழ்வான் என்பதும் புராணக் கோள்கைகள்

இங்ஙனம் நிகழும் நிகழ்ச்சியில் ஒருகற்பத்தின் தொடக்கத்தில் திருமால் விழித்தெழாமல் உறங்கிக்கொண்டிருக்கச் சிவபெருமான் அவர்முன் தோன்றி அவரை உறக்கத்தினின்றும் எழுப்ப, விழித்தெழுந்த திருமால் அச்சம் கொண்டு அவரைப் பணிந்து பிழைபொறுக்க வேண்டியதுடன் தாம் விழித்தெழாமையால் பல்லுயிர்களுக்கும் துன்பம் விளையச்செய்த பாவம் நீங்குதற் பொருட்டுச் சிவபெருமானைப் பூசித்துத் தூயரானார் என்பதும் ஓர் புராண வரலாறு. இதனை மேற்குறித்த திருப்பாட்டில் குறித்துக்காட்டத் திருவுளம் பற்றிய திருநாவுக்கரசர், இதனால் பெரியதோர் உண்மை வெளியாதலைச் சொல்லாமற் சொல்லியருள்கின்றார்.

எல்லாப் பொருள்களும் காலத்திற்கு உட்பட்டனவாக, இறைவன் ஒருவனே காலத்தைக் கடந்தவனாகின்றான். காலத்தைக் கடந்தவன் என்பது மட்டுமா? காலம் என்பதையே உண்டாக்கினவனும் அவன்தானே காலத்தைப் பொதுவாகப் படைத்துப் பின் அது நாழிகை, நாள், பக்கம், திங்கள், பருவம், யாண்டு, ஊழி, முதலிய பாகுபாடுகளாய் அமையும்வகையையும் படைத்தான். இவ்வாறு காலத்தை முன்னர்ப் படைத்து, அதன் பின் அக்காலத்தின் வழியே இயங்கும் பல பொருள்களையும் படைத்த இறைவன், காலத்தையும் படைத்தற்கு முன்னே ஒருவனாய் நின்று பின்காலத்தைப் படைத்து, அதன்வழியே மும்மூர்த்திகளையும், பிறவற்றையும் படைத்து, அனைத்தும் செயற்படுவதற்கு உடலில உயிர்போலக் கலந்து மூவராகியும் பல சமயக்கடவுளராகியும், மற்றும் பலவாகியும் நின்றான். இவ்வாறு நின்றவன் எவனோ அவனே பரமாயமூர்த்தியன்றோ!

தோற்றமும், மறைவும் உடையோர் யாவரும் காலத்திற்கு உட்பட்டவர்களே. அதனால் அவை (தோற்றம் மறைவு - பிறப்பு இறப்பு) இல்லாதவனாகிய சிவபெருமானே எதனையும் படைப்பதற்கு முன்னே ஒருவனாய் இருந்து, பின்புபலவற்றையும் படைத்துப் பலவாகியும் நின்ற பரமனாகின்றான். எதனையும் படைப்பதற்கு முன்னே இருந்த அவன், ஒடுங்கிய உலகத்தை மீளப் படைக்கக் கருதியதையே சிவபெருமான் உலகம் முழுவதையும் உண்டுவிட்டு ஆலிலைமேற் பள்ளிகொண்டிருந்த

திருமாலை எழுப்பி உலகத்தைப் படைக்கத் தூண்டிய வரலாறு உணர்த்துகின்றது. உலகம் ஒடுங்குங் காலத்து மாயையில் ஒடுங்கி, தோன்றும் காலத்தில் அதினின்றே தோன்றுவது ஆதலாலும், 'திருமால் மாயையின் வடிவம்' எனக் கூறப்படுவதாலும் மேற்காட்டிய புராண வரலாறு, மேற்குறித்த உண்மையையே விளக்கி நிற்பதாம். அதனால் அதனைச் சிறந்தெடுத்தோதி, அப்பெருமானே நமக்குப் புகலிடம் என அருளிச்செய்த அப்பர் திருப்பாடல் பின்வருவது,

'' காலமும் நாள்கள் ஊழி படையான்முன் ஏக
உருவாகி மூவர் உருவிற்
சாலவு மாகி மிக்க சமயங்க ளாறின்
உருவாகி நின்ற தழலோன்
ஞாலமும் மேலை விண்ணொ டுலகேழும் உண்டு
குறளாய்ஓர் ஆலின் இலைமேல்
பாலனும் ஆயவற்கொர் பரமாய மூர்த்தி
அவனும நமக்கொர் சரணே ''

இதனுள் '' தழலோன் '' என்றது, அவனே பரமாதலை விளக்கும் அடிமுடி தேடிய வரலாற்றை மீளவும் நினைப்பித்ததாம். சிவபெருமான் தேவர்கள் பொருட்டு நஞ்சுண்ட வரலாறு மாலயனால் அடிமுடி தேடி அறியப்படாது நின்ற வரலாறு என்பவற்றோடு, திருமாலைத் துயிலுணர்த்திப் படைப்புக்கு முயல்வித்த வரலாறும் மக்களிடையே பண்டுதொட்டு வழங்கி வருதல்பற்றி உண்மையை உணர்ந்து பரமாய மூர்த்தியைச் சரணாக அடைந்து நலம்பெற்று உய்வோமாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswamy Devasthanam, Sirkazhi.

இன்று இத் திருக்கோயிலைப் பார்வையிட்டு இறைவனை வழிபடும் வாய்ப்பு கிடைத்தது. கோவில் நல்ல சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள அடிகள் நன்றாய் கோவில் வரலாற்றை எடுத்துச்சொன்னார்கள். நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு வருவதை அறிய மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

(ஒ-ம்) இரா. இராமசுப்பிரமணியம்,
13—7—69. ஆணையர்.

உ

குருபாதம்

குருவருள்

# அருள்நெறியும் அறநெறியும்

## "திருவடியே தஞ்சம்"

மக்கள் தோன்றியது முதல் மறையும் வரையில் யாரையேனும் அல்லது எந்தப் பொருளையேனும் தஞ்சமாக நினைந்தே வாழ்க்கையை நடத்துகின்றனர். பிறந்த குழந்தை சிறிது அறிவு பெற்றவுடன் தன தாயைத் தஞ்சமாக - பற்றுக் கோடாகக் கொண்டு வாழுகின்றது. இதனை, ஒரு குழந்தை தன தாயைவிட்டுச் சிறிதும் பிரியாதிருக்க விரும்புவதிலிருந்து அறியலாகும். மேலும் சிறிது அறிவுபெற்ற பின்பு தந்தையையும் அது தஞ்சமாகக் கொள்கின்றது. பின்னர் வயது வந்து கட்டிளமை பெற்றபின்னர்க் கட்டிளங் காளையாயினும், கன்னிகையாயினும் தனது உடல்வலிமை, அழகு முதலியவற்றையே உறுதிப்பொருளாக நம்பிச் செயற்படத்தொடங்குகிறார்கள். அதுபொழுது அவர்கள் மனைவி, அல்லது கணவர், மக்கள் ஏனைய உறவினர்களையே உறுதிச் சுற்றமாகக் கொள்கின்றனர். முடிவாக, பொருளிலலார்க்கு இவ்வுலகம் இல்லை; எனவே, பொருள் இருந்தால் யாவும் கைகூடிவிடும் என்னும் கருத்தால் செல்வத்தையே தஞ்சமாகக்கொண்டு வாழ்க்கையைச் செலுத்துகின்றனர். ஆயினும் அறிவின் வளர்ச்சிக்கு ஏற்ப வேறு வேறாக அவ்வப்பொழுது மாற்றிக்கொள்ளப்பட்ட அப்பற்றுக்கோடுகளில் ஒன்றேனும் உண்மைப் பற்றுக்கோடாக உள்ளதா என்பதனை ஊன்றி உணர்தல் வேண்டும் என்று ஆன்றோர் அறிவுறுத்துகின்றனர்.

தாய்தந்தை முதலாகச் செல்வம் ஈறாக மேற்சொல்லப்பட்ட அனைத்தும் நமக்கு இந்த உடம்பின் வழியாகத் தொடர்புபடும் பொருள்களேயன்றி உயிரோடு நேரே தொடர்புபடும் பொருள்களல்ல என்பது வெளிப்படை. அதனைத்தான் ஆன்றோர் நமக்குப் பலவகையாலும் அறிவுறுத்துகின்றார்கள்.

" தந்தை யார்! தாய் யார்! உடன் பிறந்தார்.
தாரம் ஆர்! புத்திரர் ஆர் தாந்தாம் ஆரே"

என்று அப்பரும்,

" எம்மான் எம்மனையென் றெனக்கு
எட்டனைச் சார்வாகார் "

என்று சுந்தரரும் அருளிச் செய்கின்றனர். இவரெல்லாம் உற்றதுணை ஆகாமைக்குக் காரணம், இவரோடு நமக்கு உள்ள தொடர்பு உடம்புவழியாக உள்ள தொடர்பேயாதலும், அவ்வுடம்பு நிலையற்றதாய் நீங்கும் தன்மையது ஆதலும், அவ்வாறு அது நீங்குங்காலத்து அவராலேனும், நம்மாலேனும் அதனை நீங்காது நிலை நிறுத்திக்கொள்ள இயலாது போதலுமேயாம். இதனையே அப்பர் பெருமானர்,

" உற்றார் ஆர் உளரோ, உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல் லால்நமக்கு
உற்றார் ஆர் உளரோ "

என்று அருளினர். உயிரை உலகத்தோடு இணைக்கிற உடம்பு எந்த நேரத்திலும் உயிரைவிட்டு நீங்கும் தன்மையுடையது என்பதைத் திருமூலதேவநாயனர்,

" அடப்பண்ணி வைத்தார்; அடிசிலை உண்டார்;
மடக்கொடி யாரொடு மந்தணங்கொண்டார்;
இடப்பக்க மே இறை நொந்ததிங் கென்றார்;
கிடக்கப் படுத்தார்; கிடந்தொழிந் தாரே."

என்று சித்திரித்துக் காட்டுகின்றர். இதனையே திருவள்ளுவ நாயனர்,

" நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு "

என்றார். உலக முழுதும் ஒருகுடைக்கீழ் ஆளும் சக்கிரவர்த்தியே ஆயினும், பிறரேயாயினும் இந்நிலையாமையை நீக்கிக்கொள்ளுதல் இயலாது என்பதை அவர்,

" நாட்டுக்கு நாயகன், நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல, முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே."

என்று அருளினர்.

" முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும்
முடிவில் ஒரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவதும்"

என்பது பட்டினத்தார் கூறுவது

மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் — நிலமிசைத்
துஞ்சினர் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினர் இவ்வுலகத் தில."

என்னும் நாலடிச் செய்யுள் இங்கே நினைக்கற் பாலது.

உலக இன்பங்கள் அனைத்திற்கும் முதல்வாயிலாகிய உடம்பு நிலையாமை யுடைத்தாகாது ஓர் எல்லையளவு நிலைத்துள்ள தென்றே வைத்துக்கொண்டாலும் செல்வம் உடையவர்க்கே இவ்வுலகம் பயனுடைய உலகமாகும்; செல்வம் இல்லையேல் இவ்வுலகம் தொல்லைதரும் உலகமேயாய்விடும். மனைவியே யாயினும், மக்களேயாயினும், உடன்பிறந்தாரேயாயினும் ஒருவன்பால் விரும்புவது பொருளே என்பதைத் திருமூலர்,

" வாழ்வும் மனைவியும் மக்கள் உடன்பிறந்
தாரும் அளவே தெமக்கென்பர் ஒண்பொருள் "

என்று விளக்கினர். வறுமை உடையவனை அவன் தாயும் விரும்பமாட்டாள் என்பதை,

" அறம்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்."

என்று கூறுகின்றார் திருவள்ளுவர். பெற்றதாயே புறக்கணிப்பாள் என்றால், பிறர் புறக்கணிப்பதைச் சொல்லத்தேவையில்லை யன்றோ !

உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத இச்செல்வத்தைப் பெறுதல் எல்லார்க்கும் கூடுவதன்று. கூடினும், அச்செல்வம் அவர்க்குக் கடைசி வரையில் இருந்து உதவும் என்னும் உறுதியில்லை.

' மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போல் "

என்கிறார் திருமூலர். வானத்தைக் கீழ்மேலாகக் கவிழ்த்தது போலக் கட்டுக்கடங்காது பெருகியோடுகின்ற வெள்ளத்தில் அகப்பட்ட ஓடம் அதனைக் கடப்பிக்க மாட்டாது கவிழ்வது போல்வதே, அளவறியாது நடத்தும் ஆரவார வாழ்க்கையில் அகப்பட்ட செல்வமும் என அவர் குறிப்பாற் காட்டுவதை உணர்தல் வேண்டும்.

" அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும "

என்று செல்வம் மெல்ல . மெல்ல மறைதலைக் குறித்த திருவள்ளுவர்,

செல்வம் வருங்காலத்தில் பல்வேறு வகையில் வந்து குவிவதுபோலவே போகுங் காலத்திலும் பல்வேறுவகையாய் இருந்த இடந்தெரியாமற் போய்விடும் என்பதைக் கூத்துக்கு வந்து போகின்ற கூட்டமாகிய நல்லதோருவமையால் நன்கு விளக்கினர்.

கூத்தாட் டவைக் குழாத்தற்றே பெருஞ் செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று

" மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்."

என்கின்றது நாலடியார். இத்தன்மைத்தான செல்வம் எங்ஙனம் ஒருவர்க்குத் தஞ்சமாகும் !

இனி இச்செல்வம் ஒருவற்கு வாழ்நாளளவும் உள்ளதேயாயினும் செல்வத்தாற் பயனடையும் காலம் பெரும்பான்மையும் இளமைக்காலமேயாம். அதனல், முதுமையில் வந்த செல்வம் கொழுநன் இல்லாப்பெண்ணிறத்து உண்டான அழகுபோல்வது என்றார் ஔவையார். ஆகவே இளமை உள்ளபொழுதுதான் செல்வம் பயனுடைய ஒன்றாகும். ஆயினும், இளமை

வாழ்நாளில் சிலகாலமே நிற்பதன்றி என்றும் நிற்பதன்று. நாள்தோறும் காண்கின்ற சூரியனது நிலையே இதனை நமக்கு நன்கு விளக்கும். காலையில் தோன்றுகின்ற சூரியன் இளவெயில் பரப்பிச் செக்கச் சிவந்த நிறத்துடன் அழகாய்க் காணப்படுகின்றான். இஃது அவனது குழவிப் பருவமாகும். நண்பகற்போதில் கடுவெயில் எறித்துத் தன்னைக் காணவும் ஒட்டாது, தன்முன் நிற்கவும் ஒட்டாது கடுநிலையுடையவனாய் இருக்கின்றான். இதனை அவனது கட்டிளமைக் காலம் என்னலாம், மாலைப்பொழுதில் மஞ்சள் வெயில் காட்டி மெல்ல மெல்லச் சாய்ந்து, போன திசை தெரியாவண்ணம் மறைந்து போய்விடுகின்றான். இதுவே அவன் மூத்துக் கழியும் நிலை. எனவே, கடுவெயில் எறித்துத் தனது ஆட்சியை அவன் மிகக வன்மையுடன் செலுத்தி நிற்பது எத்துணை நேரம்! இதனைப் பார்த்தும் உண்மையை உணரவில்லை என்றால், அவர்கள் கண்ணிருந்தும் குருடர்தாமே?

இன்னும் நாம் அறிந்த அளவில் ஒரு பசுவின் வயிற்றிற் பிறந்த கன்று வளர்ந்து காளைகள் கூட்டத்தில் காளையாய்த் திரிவது எத்துணைக் காலம்! அத்தகைய காளைகள், பின் பலர் சேர்ந்து தூக்கிவிடும் அளவிற்கு மூப்படைந்து போதலை எத்தனை இடத்திற் கண்டிருக்கிறோம்? இவற்றின் நிலைமை தானே மக்கட்கும் உள்ளது? அதனை மறந்து இளமையைத் தஞ்சம் எனக் கொள்ளுதல எவ்வாறு கூடும்! இவ்வகளை யெல்லாம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றார் திருமூல தேவர்.

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர் :
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே

இளமையில் மாதரால் விரும்பப்பட்ட அவனே, பின் முதுமையில் அவரால் வெறுக்கப்படுவதைத் திருமூலர் தம்மேல் இட்டுக் கூறும் திருமந்திரம் இது:

விரும்புவர் முன்னென்னை மெல்லியல் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைகொண்ட நீர்போல் ;
அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயுமொத தேனே

இளமை நீங்கி முதுமை வந்த காலத்தில், செயலற்றுப் போதலேயன்றிச் சொல்லும் அற்றொழியும். அந்நிலையில்

யாரைக் கொண்டு என்ன செய்ய இயலும் என்பதைத் திருவள்ளுவர்

" நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும் "

என்பதனால் விளக்கினார்.

யாக்கையும் செல்வமும், இளமையும் நிலையுடையன அல்ல என்பதும், அவை விரைவில் நீங்குவன என்பதும் காட்சியளவை யிலே நன்கறியப்படுவனதாம்; இவற்றிற்கு உரையளவைகளா யுள்ள நூல்களைக் காட்டவேண்டுவதில்லை. ஆயினும், நிலை யில்லாத இவற்றை யொழித்து நிலையுடையது ஏதேனும் ஒன்று உண்டோ? உண்டாயினன்றோ இவைகளைத் தஞ்சம் எனக் கொள்ளாது அதனைத் தஞ்சம் எனக் கொள்ளலாம் என வினவ விரும்புவர் சிலர். அதற்கு யாக்கையும், இளமையும், செல்வ மும் என்னும் இவை தவிர வேறு என்ன இருக்கின்றது? ஒன்றும் இல்லை; அதனால் இவற்றது நிலையாமையைப் பேசிப் பயனில்லை; இவை உள்ளவரையில் இவற்றைப்பற்றி வாழ்ந்து, இவை நீங்கிப்போனால், நாமும் போய்விடுவதுதான செய்யத் தக்கது' என்பர் சிலர். அவர்கட்கு நாம் ஒன்றும் சொல்ல இயலாது. ஆயினும், 'மனமுவப்பற்றிக் கேட்பார் உளராயின் கேட்டுப் பயனடையட்டும்' என்று அருளாளர் சிலர் தாம் அனுபவத்தில் கண்ட அரும்பொருள்கள் சிலவற்றை அரிய தங்கள் அருண்மொழிகளிற் பொதிந்து வைத்து அருளிச் சென்றனர். அவைகளையே ஆன்றமைந்த சான்றோர் பலரும் அறநெறிகளாக எடுத்துக் கூறிப் போந்தனர். அவ்வகையில் மேற்கூறியவாறு நிலையாமைகள் பலவற்றையும் எடுத்துக் கூறிய திருமூலர், நிலைத்த ஒன்று இறைவன் திருவடியே; ஆகலின், அதுவே அனைவர்க்குந் தஞ்சமாதற்கு உரியது என்று அருளிச்செய்கின்றார்.

திருவடி யேசிவ மாவது; தேரில்
திருவடி யேசிவ லோகம; சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது; செப்பில்,
திருவடி யேதஞ்சம்; உள் தெளி வார்க்கே

கிழக்கெழுந் தோடிய ஞாயிறுக்கு உள்ளதுபோலவே எல்லாப் பொருட்கும் தோற்றமும் மறைவும் இருப்பினும், அவை இரண்டும் இல்லாத ஒரு பொருள் இறைவனே. அதனால்

அவனது திருவடியே தஞ்சமாதற்கு உரியது. இறைவனது என்றும் உளனாதல் தன்மையைத் திருமூலர்,

> " பிறப்பிலி, பிஞ்ஞகன், பேரருளாளன்,
> இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
> துறப்பிலி தன்னைத் தொழுமின் ; தொழுதால்
> மறப்பிலி, மாயா விருத்தமும் ஆமே "

என்றும்,

> " ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
> வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தான்அருட்
> சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
> நீதியு மாய்நித்த மாகிநின் றானே "

என்றும்,

> " கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்
> எண்ணிலி தேவர் இறந்தார் "

என்றும் விளக்கினர். இத்தகைய அருள்நெறியை உணரமாட்டாதார் பொருட்டு அறநெறியையே கூறப் புகுந்த திருவள்ளுவரும்,

> ' நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
> புல்லறி வாண்மை கடை "

என்பதனால் 'நிலைத்த பொருளும் ஒன்று உண்டு' என்பதையும்,

> " பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்; மற்று
> நிலையாமை காணப் படும் "

என்பதனால். 'நிலைத்த பொருள் கிடைப்பது இந்நிலையாப் பொருள்களில் உள்ள பற்று நீங்க வழியே; அப்பற்று நீங்காதவர்க்குக் கிடைப்பன இந்நிலையாப் பொருள்களே' என்பதையும் உணர்த்தினர். 'நிலைத்த பொருள் யாது' என்று கேட்பவர்கட்கு அவர், தாம் எடுத்துக்கொண்ட நூற்கேற்ப.

> " அன்றறிவாம் என்னாது அறம்செய்க ; மற்றது
> பொன்றுங்காற் பொன்றாத் துணை "

எனக் கூறுராயினும், 'அறமாவது யாது' எனக் கேட்பவர்க்கு,

" அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது "

என்பதனால், 'இறைவனுக்கு ஏற்புடைய செயலே அறம்; ஏனையவெல்லாம் மறம் என்பதுணர்த்தி, அதனால் பிற பிற வழியிற் சென்று அலையாது அவனது திருவடியே புகல் என அடைதல் தக்கது என்று கூறினர்.

" பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவனடி சேரா தார் "

என்பது, 'இறைவனது திருவடியே தஞ்சம்' எனத் திருவள்ளுவர் அறுதியிட்டளிக்கும் தீர்ப்பு.

எங்கள் ஆதிபரமாசாரிய சுவாமிகளும்,

" மின்போலத் தோன்றி விடும்உலக வாழ்வனைத்தும்
என்போ லிகள்திரம்என் றெண்ணுவார் - தன்போதம்
இல்லார், சிவபோகம் என்றும் அருந்தியிடும்
நல்லார் திறம்இதுஎன் னர் "

என்றும்,

" தேசம்ஊர் பேர்காணி சீர்வரிசை சாதியெனும்
ஆசையால் நெஞ்சே அலையாதே - நேசப்
பொருப்பானை, நின்னறிவிற் போக்கு வரவற்
றிருப்பானைப் பார்த்தே இரு "

என்றும் அருளிச்செய்தார்கள். இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்த குமரகுருபரர்,

" நீரிற் குமிழி இளமை; நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்; - நீரில்
எழுத்தாகும் யாக்கை; நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று "

என்றார்.

இவ்வாறு அருள்நெறியே அறநெறியாய் இருத்தலை உணர்ந்து அனைவரும் ஆண்டவனது திருவடியே தஞ்சம் என்று உணர்ந்து உய்வார்களாக.

# சிலப்பதிகாரக் காப்பியக் கோயில் - - ஓர் எழிலோவியம்

திரு. செ. வைத்தியலிங்கன் எம். ஏ., எம். லிட்.,

( மலர் 28, இதழ் 8, பக்கம் 439 இன் தொடர்ச்சி )

இனிய மொழியை யுடைமையால் தேனை ஒத்தவளாகக் கண்ணகி அமைகின்றாள். தேனானது மலரில் பிறந்து இனிமை, பிணி தீர்த்தல், நெடுங்காலம் கெடாமை, ஊட்டம் முதலிய பண்புகளைத் தன்னைக் கொண்டார்க்குத் தரும் நன்பொருள். கண்ணகியின் வாய்ச்சொல்லும் மனமாகிய மலரில் தோன்றி இத்தகைய பண்புகளைத் தன்னைக்கொண்ட கோவலனுக்கு அளிக்கும் பான்மையது. எனவே, கண்ணகியிடம் கோவலன் தான் கொண்ட அநுபவத்தைச் சொல்லில் உருவமைத்துத் 'தேனே' என இயம்பிக் களிக்கின்றான். இவை 'இடக்கர்' என அடியார்க்குநல்லார்க்குத் தோற்றுகின்றன. இவற்றின் நுட்பமெல்லாம் திருக்குறள் (1101) பரிமேலழகருரையில் 'வட நூலார் இடக்கர்ப் பொருளவாகச் சொல்லிய புணர்ச்சித் தொழில்களும் ஈண்டு அடக்கிக் கூறப்பட்டன' என வரும் பகுதியால் தெளிவாகும்.

### அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே :

பெறுதற்கரிய பாவையாகவும் அமுதமாகவும் கண்ணகி மதிக்கப்படுகிறாள். காட்சியின் உயிர் மயக்குறுதலின் கொல்லி யிற் பாவாய் என்றும், அவ்வாறு அழியுமுயிரை இமைப்பில் தருதலின் ஆருயிர் மருந்தே என்றும் உரையாசிரியர் அடி யார்க்கு நல்லார் விளக்கம் கூறுகிறார்.

யாரும் உலகில் பெறுதற்கரிய பாவை (சிலை) வடிவாக அஃதாவது பத்தினித் தெய்வமாகப் பிற்காலத்தில் சிலையெடுக் கும் வாய்ப்பினைக் கண்ணகி பெறுகிறாள்; இத்தகைய சிறப்பு நிகழ்ச்சியானது இளங்கோவடிகளின் முன் நோக்குக் கவிக் குறிப்பாகக் (Poetic suggestion) கோவலன் வாய்வழி அமை கின்றது.

கோவலன் கண்ணகியுடன் மகிழ்ந்து அளவளாவும் நேரத் தில், 'ஆருயிர் மருந்தே' எனக் கூறுதலை ஊன்றி நோக்குதல்

வேண்டும். பொதுவாக, மருந்தானது உடல் பிணியைத் தீர்க்கவே பயன்படுவதாகும். ஆனால், 'உயிர் மருந்தே' அதிலும் 'ஆருயிர் மருந்தே' என்று வரும்போது ஏதோ சிந்திக்க வேண்டிய இடமாகிறது. மனைவிக்குத் தன் உயிரினும் கணவனது உயிர் 'ஆருயிர்' ஆகும். கற்புடைச் செல்வி கண்ணகிக்கு ஆருயிராய் நிற்பவன் கோவலன் அவன் உயிருக்குப் பிணியாகிய பழி (சிலம்பு திருடியதாகிய வீண்பழி) ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டுதலால் ஏற்படுகிறது. அந்த வீண்பழியாகிய பிணியை எதிர்த்துப் போராடி நீக்கும் மருந்தாகக் கண்ணகி பிற்காலத்தில் விளங்க இருக்கின்றாள். இந்தப் பொருள் நுட்பம் கவிஞன்தன் முன்நோக்குக் குறிப்பாக அமைந்து இலக்கிய இன்பம் சுரக்கிறது.

## பெருங்குடி வணிகன் பெருமட மகளே :

பெருமைக்குரிய குடித்தோன்றலும் வணிகனுமாய மாநாய்கனுக்குப் பெருமட மகளாகக் கண்ணகி அமைகின்றாள். நல்ல குலத்து நங்கை கண்ணகிக்குப் பெண்மைப் பண்புகளாகிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கும் பொருந்தியுள்ளன. என்றாலும், 'பெருமடமகளே' என்றுதான் விளிக்கப் பெறுகின்றாள்; காரணம் சிந்தித்தற்குரியதுதானே !

மதுரையிலே தேரா மன்னன் பாண்டியனால் கோவலன் திருட்டுக்குற்றம் சாட்டப்பட்டுக் கொலையுண்கிறான்; கேள்விப்படுகிறாள் கண்ணகி; ஓடோடிச் சென்று வெட்டுண்ட கணவனை வேதனையோடு காண்கிறாள். கணவன் மீளவும் உயிர்த்தெழுந்த வனாய் 'இருந்தைக்க' எனப் பணித்து மீண்டும் மாண்டு விடுகிறான். தன் ஒற்றைச் சிலம்பால் பழியொடு மாண்ட கணவனைத் தன் பிறிதொரு சிலம்பால் பழியினின்றும் விடுவிக்க வேண்டிய பெரும் பொறுப்பினை உணர்கிறாள்; எரிதழலெனச் சீறிச் சினந்து பொங்கி நிற்கிறாள். புகார்க்காண்டத்தே அஞ்சியொடுங்கி வளர்த்த நாணமும் பயிர்ப்பும் அவளிடத்தே அடங்கி ஒடுங்கிவிடுகின்றன; ஆறிய கற்பானது சீறிய கற்பாக வெடித்து வெளிப்பட்டதால்,

" மட்டார் குழலார் பிறந்த பதிப் பிறந்தேன்
பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோ டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையும் காண்குறு வாய்நீ "

எனச் சாற்றித் துன்பம் சுமந்த உள்ளத்தோடு மதுரைமாநகரில் சுழன்றோடித் திரிகிறாள். இங்குக் கண்ணகியின் இளமை (மடம்)

துடிதுடிப்புக் கொண்டிருத்தலைக் காண்கிறோம்; மேலும், கணவன் - கட்டளையை நிறைவேற்ற 'மடம்', அஃதாவது, கொளுத்தக்கொண்டு கொண்டது விடாத பெண்ணியல்பினையும் காண்கின்றோம். எனவே, நல்ல குலக்கொடியாகிய கண்ணகி, 'பெருமடமகளாகவும் விளங்குகிறாள். இத்தகைய நிகழ்ச்சிகளையெல்லாம் உளப்படுத்திக் கவிமுன் தன முன்னோக்குக் குறிப்பாக இந்த இடம் அமைந்துள்ளது சிந்தித்தற்குரியதாகும்.

> " மலையிடைப் பிறவா மணியே யென்கோ
> அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
> யாழிடைப் பிறவா இசையே யென்கோ."

இவையெல்லாம் கோவலன் கண்ணகியை ஆவலோடு அழைத்து மகிழும் இடங்களாகும்.

மலையிடைப் பிறக்கும் மணி குழையாமையின் அதிற் பிறவா மணியே யென்பேனோ? அலையிடைப் பிறக்கும் அமிர்தத்திற்கு இவ்வடிவின்மையின் அதனிற் பிறவாத அமுதே யென்பேனோ? யாழ் கண்ணுக்கு இன்னாதாகலின் அதனிடைப் பிறவாத இசையே யென்பேனோ எனப் பொருள்நயம் காண்பார் அடியார்க்கு நல்லார்.

மலையரசன் மகளாகப் பிறந்த மனோன்மணியாகிய (மன + ஒன் + மணி) பார்வதியையும், அலைமகளாகப்பிறந்த அமிழ்தாம் திருமகளையும், யாழ்தரும் இசைப்பயனை விளங்கும் கலைமகளையும் நினைவுகூருமாறு இத் தொடர்கள் அமைந்துவிடுகின்றன. உலகத்துப் பெரும் பெண்தெய்வங்களாக மலைமகளும், அலைமகளும், கலைமகளும் பெரிதும் போற்றி வழிபடப்பெறுகின்றனர். காரணம் அவர்கள் வலிவு, பொருள், அறிவு ஆகியவற்றை மக்களுக்கு முறையே வழங்குதற்குரியவர்களாக மதிக்கப்படுகிறார்கள். அல்லாமலும், மலைமகள் அறம்வளர்த்த நாயகியாக அறம் செழிக்கக்காரணமாக இருத்தலால் 'அறம்' எனும் உறுதிப் பொருளும், அலைமகள் திருமகளாகப் பொருட்பேற்றிற்குக் காரணமாக இருத்தலால் 'இன்பம்' எனும் உறுதிப்பொருளும் சுட்டப்படுதலைக் கூர்ந்து நோக்கி இன்புறலாம். இவற்றால், கோவலன் கண்ணகியைத் தெய்வமாக வழிபட்டான் என்பது பொருளன்று. அடியார்க்கு நல்லார் வரைந்த பொருள்நயத் தூடே இவ்வாறான முன்னோக்குக் கவிக்குறிப்புக்களையும் இளங்கோவடிகள் பெறவைத்தார் என்பதே நோக்கமாகும். இவ்வாறு



ஸ்ரீ வைத்தியநாதர் வகுள ( மகிழ ) விருட்சத்தின்கீழ் வீற்றிருந்து
திருமாலுக்கு அருள்புரிதல்

சிவமயம்

தருமையாதீனம்

# வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,

வைத்தீஸ்வரன்கோயில்.

## அருள் விளக்கக் குறிப்பு கடிதம்

---

இப்பவும் என் கணவருக்கு உடம்பு குணமில்லாமலிருந்து பலவித வைத்தியம் செய்தும், பெரிய டாக்டர்கள் பார்த்தும் கைவிடப்பட்ட நிலையில் எல்லாம்வல்ல ஸ்ரீ வைத்தியநாதப் பெருமான ஸ்ரீ தையல்நாயகி அம்பாளிடம் முறையிட்டு மாங்கல்ய பாக்கியம் நிலைத்திருக்கப்பிரார்த்தித்துக்கொண்டேன். என் பிரார்த்தனை முதல்நாள் இரவு. மறுதினம் காலை ஸ்ரீ அம்பாள் கடாக்ஷம் ஏற்பட்டு என் கணவருக்குக் குணம் அடைய ஆரம்பித்து இப்பொழுது பூரணகுணமாகியிருந்து வருகிறார்கள்.

என் கழுத்திலிருந்த திருமாங்கல்யச் சங்கிலியை வைரக்கல் இழைத்த திருமாங்கல்யத்தை ஸ்ரீ அம்பாளுக்கு காணிக்கையாக சமர்ப்பித்து சாத்தி இன்று ஆடிவெள்ளி தரிசனம் செய்தோம். ஷை சங்கிலிக்கும் திருமாங்கல்யத்திற்கும் கோயில் இரசீது பெற்றுக்கொண்டேன்.

ஸ்ரீ வைத்தியநாதப்பெருமான் ஸ்ரீ தையல்நாயகி ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி துணைகொண்டு சென்றோம்.

வணக்கம்.

(ஒ-ம்) வ. நா. சொ. சிந்தாமணி ஆச்சி,

ராங்கியம், திருச்சி ஜில்லா.

5—8—69.



பெருமானும், பெருமாட்டியும்,
வைத்தியக்கோலமும், தையலம்மைக் கோலமும் கொண்டு
தைலபாத்திரமும் சஞ்சீவி வில்வமரத்தடிமண் மருந்தும் எடுத்துக்கொண்டு
கைலையினின்றும் திருப்புள்ளிருக்குவேளூருக்கு எழுந்தருளுதல்



ஸ்ரீ வைத்தியநாதர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு
செண்டு வழங்குதல்

பார்க்கின்றபோது மானுடமகளாகிய கண்ணகியைப் புகார்க் காண்டம் தொடங்கியே தெய்வமாக ஆக்க முன்னேற்பாடு நடத்துகிருர் என்பது தெளிவாகும்.

## தாழிருங் கூந்தல் தையால் நின்னே :

கண்ணகியை அவள்தன் நீண்ட கருங்கூந்தலாலேயே கோவலன் குறிப்பிட்டுக் கூறுதலில் இன்பம் காண்கின்ருன். புறத்தோற்றத்திலே பெண்மை அழகு மங்கலமாய்ப் பொலிவுறு தற்குக் கூந்தல் பெரிதும் காரணமாகிறது. கூந்தல் அடர்ந்து நீளுதலால் மகளிர் வளர்ச்சியும் முகநலமும் தெள்ளெனத் தோன்றும். சங்க இலக்கியங்களிலே தலைவியின் அடர்ந்த கருங் குழலே தலைவனுக்குத் துயிலணையாக இன்பந் தந்த இடங்கள் உண்டு. ஆனல் கண்ணகியின் கூந்தலோ 'வழக்குரை காதை' யில் தானும் தாழ்ந்து சரிகிறது; முறை பிறழ்ந்த பாண்டியன் அரசையும் தாழ்த்திச் சரிகிறது.

" காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயினன் "

எனவும்,

" மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் — வையைக்கோன்
கண்டளவே தோற்றன் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றன் உயிர்."

எனவும் வருமிடங்களைக் காண்க. எனவே 'தாழ்குழல்' என் பதற்கு நீண்ட கூந்தல் என்ற பொருளோடு, வினைத்தொகை யாகக் கொண்டு, தாழ்ந்த, தாழ்கின்ற, தாழும் கூந்தலாகப் பொருள் கொள்ளவும் இடமாகிறது; பேராதிக்க முறைகேட்டினைத் தாழ்த்தும் கூந்தலெனவும் பொருள்படுகிறது.

காப்பியம் படைக்கின்ற நல்லிசைப் புலவர்கள் காப்பிய மாந்தர்களையும் அவர்கள்தம் செயல்களையும் சூழல்களையும் முன் கூட்டியே கற்பனைக் கண்கொண்டு தம்மனத் திரையில் ஓவியங் களாகத் தீட்டி விடுகிருர்கள்; எனவேதான், அவர்கள் காப்பிய உத்திகளை இவ்வாறெல்லாம் திறமையாகக் கையாண்டு கலைச் சுவைதேர் மக்களை நிலைகொள்ளச் செய்து கவர்ந்து விடுகிருர் கள். வாழிய கவிஞர்கள்தம் மாட்சி.

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

**வித்துவான். திருமதி. ப. நீலா**

( மலர் 28, இதழ் 8, பக்கம் 345 இன் தொடர்ச்சி )

## (20) எல்லாம் வல்ல சித்தரானது

சப்த வடிவாகிய நான்மறையின் எல்லைகடந்த பரம்பொருளாகிய சிவம் மதுரையை நான்மாடக்கூடலாக்கிய பிறகு எல்லாம்வல்ல சித்தராக விளையாடினர். இனி அச்செயலை உவந்து காண்போம். குணங்குறி கடந்த வேடர் சித்தராய் வந்தது, பாண்டி நாடெனும் திருவைப் பெற்ற செழியன் (அபிடேக பாண்டியன்) அதன் மேலமைந்த நல்ல வீடும் எய்தவே என்கிருர் ஆசிரியர்.

### புலியதளுடுக்கையான் புவியில் வந்தான் :

வார்சடையும், பூணநூல் அணிந்த மார்பும், நீறணி நெற்றியும், யோகபட்டிகையும், தோளில் வெண்பொடிப் பொக்கணமுமாக வந்தார் சித்தர். கழுத்திலணிந்த மணிமாலை நீறணிந்த மேனியிடமெல்லாம்பட்டு செம்மையைக் காட்ட, வேங்கையீருரிவை அசைத்த கோவணம், திருக்கரத்தில் வேத்திரப்படை, பாதங்களில் உபசிடதப் பாதுகைகள் அணிசெய்ய வருகிருர் போதங்கடந்த பொருள். திருமுக மண்டலத்தில் சிறிது வெயர்வையும் மூரலும் அரும்பியிருக்க மதுரையில் சித்ரகூடங்கள், நாற்சந்திகள் தோறும் நின்று சித்துக்களைச் செய்து மக்களைத் தம்பால் ஈர்க்கின்ருர்.

### இந்திர சாலங்காட்டும் மந்திரச் சித்தர் :

தெற்கிலிருப்பவர் பின் வடக்கில் இருப்பார். கிழக்கே ஒருசமயந் தோன்றி மேற்கில் காட்சி தருவார். பிறிதொருகால் இந்திர சால வித்தையினல் மறைந்தும் போவார். தொலை

வில் உள்ள மலைகளை அருகேயமைத்துக் காட்டி அணித்தாய் உள்ள மலைகளைத் தொலைவில தோற்றம் தரச்செய்வார். மூத்த வர்களை இளமைபெறச் செய்தலும் இளமைக்கு முதுமைக் கோலம் பூண்பித்தலும் இவர் காட்டிய சித்துக்களே. அது மட்டுமா! ஆணைத் திடீரென்று பெண்ணாக - பெண்ணைத் திடீ ரென்று ஆணாகமாற்றி அதிசயம் விளைப்பார். மலடி மதுரையின் மகவுபெற்றாள். கூன் குருடு போன்ற ஊனங்கள் கண்காண நீங்கியது. வெள்ளி செம்பு இரும்பு ஈய உலோகங்கள் கனகமாக மாறிக் கண்ணைப் பறித்தன. செல்வந்தன் வறியவனாக அவன் தேடிய பொருளெல்லாம் வறியவர் மனைக்குச் சென்றன. காஞ்சிர மரத்தில் நல்ல தீங்கனி பழுக்கக் கண்டார்கள். முதுவேனில் பருவத்தில் வைகையில் தண்ணீர் பெருகியது-உடனே வற்றிடவும் செய்தது. ஓடை, பொய்கை நீர் உப்புச் சுவையையும் கடலின்நீர் இன்சுவையையும் பெற்றது.

இவற்றிற்கு மேலாக விண்ணிலே மாத்திரைக்கோலை வீசி அதன்மேல் ஊசியை நட்டு அதன்மேல் நேராகவும் தலைகீழாக வும் நின்றாடினார். கொண்டலைப் பிடித்துக் கண்டவர் அதிசய முற அதனைக் கசக்கி இடியொடு மழையைப் பிழிந்தார். பகலிலே தோன்றும் பொருள்களை இரவிலும் இரவில்மட்டுமே காணக்கூடிய பொருள்களைப் பகலிலும் வரவழைத்தார். பீளை யொழுகு கண்ணினராய் இருந்த முதியவர் ஒருவரை இளையவ ராக்கி அவர் கருத்திற்கிசைய அவர் மனைவிக்கும் இளமை கொடுத்து அவர்கள் புத்திரச் செல்வம் பெற புண்ணிய நீறளித் தார் அப்பொல்லாத சித்தர்.

'அ' என்ற எழுத்து முதலிலுள்ள மூன்று வித்தைகள் 'வ' என்ற எழுத்துடன் தொடங்கும் மூன்று வித்தைகளைக் காட்டி மகிழ்வித்தார். அவை 1. ஆகருஷணம், 2. அதிரிச்சி யம், 3. அஞ்சனம் என்றும் 1. வசியம், 2. வாதம், 3. வயத் தம்பம் என்றும் கூறப்படும்.

"அகர மாதிமூன் றாகிய ஆகரு டணமே
புகரி லாவதி ரிச்சிய மஞ்சனம் பொருவில்
வகர மாதிமூன் றாகிய வசியமே வாதம்
இகலி லாவயத் தம்பமென் றின்னவை செய்தும்"

மக்களை மகிழ்வித்தார்.

**தென்னவன் மனையிலும் புதுமை:**

பூமியர்கோன் காதல் மகளிரொடு விளையாடும் சோலையி னுள்ள தென்னையைப் பனையாகச் செய்தார். தருக்கள் - புட்கள் - விலங்குகள் இவைகளை ஒன்றை ஒன்றாக மாற்றி வேடிக்கை காட்டினார். இப்படிச் சித்தர் செய்யும் செயல்களி லும் அவர் அழகிலுமாக மக்கள் தம்மை மறந்து நின்றனர்.

இச் செயல் புதுமைகளை உழையரால் அறிந்தான் அபிடேக பாண்டியன். சித்தரைத் தானுங் காண ஆசையுற்று அழைத்து வர அடுத்தாரை அகற்றினன். சென்றவர்களும் பணிமறந்து சித்தர் பக்கம் நின்றனர். பின்னும் அமைச்சர்களை அனுப்பி அழைத்துவரச் சொன்னான். மன்னன் கட்டளையைச் சிரமேற் றாங்கிச் சென்ற அவர்கள் எல்லாம்வல்ல சித்தரை அணுகி மன்னனின் விழைவை விளம்பினர்.

'எமக்கு மன்னனால் என்பயன்? வேண்டுமானால் அவன் இங்கு வரவேண்டுமேயொழிய யாம் அரண்மனைக்கு வரமாட் டோம் - சென்று சொல்லுக' எனக் கூறினார். அமைச்சர்களும் அவரடி பணிந்து விடைகொண்டு அப்படியே அந்தச் செய்தியை மன்னனிடம் தெரிவிக்கத் தருமவேந்தனும் சித்தரின் கருத்திற்கு மாறுகொள்ளாமல் யோகிகள் வானுலக தேவர்களைக் கூட மதியாரே - மண்ணுள்வாரை மதிப்பரோ - என்று கூறிச் சிந்தித் திருந்தான்.

( வளரும் )

## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக் கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்.
உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B. L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# மனம்

திரு. நீலகண்ட சர்மா

இடைவிடாது இயங்கும் ஒருபொருள் மனம். சிந்தனை செய்வதற்கு உறுதுணையாயிருப்பதால் சித்தம், சேதஸ் என்ற பெயர்களாலும், நினைவுக்கு நிதானமாக இருப்பதால் மனம், மானசம் என்ற பெயர்களாலும், இதயத்தை இருப்பிடமாகக் கொண்டிருப்பதால் ஹிருதயம், ஹிருத் என்ற பெயர்களாலும் அது அறியப்படுகிறது.

"चित्तं तु चेतो हृदयं स्वान्तं हृन्मानसं मनः"

(अमरकोशः)

உடலின் உள்ளே இருந்து இயங்குவதால் அதை அந்தக்கரணமென்றும் சொல்வதுண்டு. அதற்கு நாலு அவஸ்தை (நிலை)கள் உண்டு. ஜீவாத்மாவுடன் ஒன்றுய்க்கலந்து இருக்கும் அந்த அவஸ்தைகளாவன :- அறிவு, அபிமானம் அல்லது மமதை, சங்கல்பம் அல்லது எண்ணம், பிரகாசம் அல்லது ஒளி இவைகளேயாகும்.

ஸங்கல்பாவஸ்தையில் மனமென்றும், பிரகாசாவஸ்தையில் சித்தமென்றும், அறிவாக உள்ள நிலையில் புத்தி என்றும், அபிமானமாகும்போது அஹங்காரம் (தற்பெருமை) என்றும் சொல்லப்படுகிறது. இந்த உபாதி (குண) களோடு ஜீவன் இந்திரியங்கள் (புலன்கள்) வழியாகப் பிரபஞ்சத்தில் (பூமியில்) சுற்றுகிறது. இதுதான் ஜாக்கிராவஸ்த்தை (விழிப்பு) அந்த நேரத்தில் அந்தக்கரணத்தோடு சேர்ந்த ஜீவன் உலகத்தில் ஈடுபட்டிருப்பதால் அதில் மமதையும் உண்மையென்ற புத்தியும் ஏற்படுகிறது. எப்போது ஜீவன் அந்தக்கரணத்தை வெளியே போகாமல் ஹிருதயத்திற்குள் வைத்திருக்கிறதோ அந்த நிலையை சொப்பனம் (கனவு) என்று சொல்லுகிறார்கள். ஜீவனுக்கும் அந்தக்கரணத்திற்கும் தொடர்பு இல்லாமல் இருக்கும் நிலைதான் சுஷுப்தி (உணர்வற்றதன்மை) என்று சொல்லப்படுகிறது.

சொந்தமான தன்மைகள் இல்லாதது ஜீவன். உபாதி (குண) களோடு சேரும்போது அவைகளுடைய தன்மைகள் ஜீவனுக்கும் ஏற்படுகிறது. அதுவழியாகத்தான் கன்மங்கள் செய்வதும் அதன்பலன்களை அனுபவிப்பதும் ரூப (வடிவ) இல்லாத அந்தக்கரணம் சப்தம் (ஒலி) முதலிய குணங்களோடு இணைந்து ராகம் (ஆசை) துவேஷம் (பகை) பயம், குரோதம் (ஆத்திரம்) துக்கம் (துயரம்) சந்தோஷம் அன்பு முதலிய குணங்களில் தெரியப்படுகிறது. ஒரு நிமிஷமாவது அசையாத நிலையில் அது இராது. அதனால்தான் மனம் ஒரு குரங்கு (Mind is a Monkey) என்று மேல்நாட்டாரும் சொல்கிருர்கள்.

நினைவு. மறதி. இயக்கம் என மூன்று சுபாவம் (குணம்) மனத்திற்குண்டு. அவைகளை ஸத்வம், ரஜஸ். தமஸ் என்று சொல்லலாம். அறிவும் ஒளியும் ஸத்வ குணத்திற்கும், மறதியும் சோம்பலும் தமோகுணத்திற்கும் இவை இரண்டும் கலந்தது ரஜோகுணத்திற்கும் இயல்பு. இவைகளில் எதிலாவது ஒட்டாமல் மனமிருக்காது. அதை நம் இஷ்டப்படி கட்டுப்படுத்துவது மிகமிக கஷ்டமான காரியம்.

“वलवान् इन्द्रियग्रामो विद्वांसमपकर्षति”

(புலன்கள் மிகச் சக்திவாய்ந்தவை. அவைகள் படித்தவர்களையும் ஞானிகளையும் கூட இழுத்துப் பாபத்திற்கு உள்ளாக்கிவிடுகின்றன.)

இதற்கு உதாரணமாக ஒரு சிறு கதை சொல்லலாம். இயற்கை அழகு வழிந்தோடும் ஒரு தபோவனம். அருகாமையில் ஓடும் ஆற்றின் ஜலத்திலிருந்து எழும் ஓங்காரமும் பறவைகளின் இனிய குரல்களும் அல்லாமல் அங்கு எல்லாம் சாந்தமாயிருந்தது. ஆங்காங்கு அமைந்திருக்கும் ஆசிரமங்களில் வேதங்களையும் உபநிஷத்துக்களையும் கற்றுகாலைக்கடன்களை சாலநடத்தி தைவீக ஜீவிதத்தில் ஈடுபட்டுள்ள முனிவர்களையும் அவர் சீடர்களையும் தவிர அங்கு வேறு யாரும் கிடையாது. மாலை வேளைகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்ருகக் கூடியிருந்து தைவீக காரியங்களைச் சிந்தனை செய்வது வழக்கம். ஒரு நாள் மாபெரும் அறிஞராகிய ஒருவர் புராணத்தைப்படித்து விளக்கம் கூறிக்கொண்டிருந்தார். நடுவில் முன் சொன்ன "பலவான் இந்திரியக்கிராமோ" என்று தொடங்கும் கவி பேச்சுக்கு விஷயமாக வந்தது. புலன்கள் மிகமிக சக்தி வாய்ந்தவை.

படித்த தத்வ ஞானியாயிருந்தாலும் அவனையும்கூட இழுத்து எங்கெங்கேயோ கொண்டுபோய் விடுகிறது என்ற பொருள் கொடுக்கும் அபகர்ஷதி என்ற வார்த்தை நமது பண்டிதருக்கு சந்தேகத்தைக் கொடுத்தது. புலன்கள் சக்திவாய்ந்தவைதான்; சாதாரண மனிதனை அவைகள் அடிமைப்படுத்திவிடுவது வழக்கம். ஆனால் அவைகளின் திறமை படித்தவனிடம் பலியாது என்று உறுதிப்படுத்தி சீடர்களிடம் கவியில் அபகர்ஷதி என்பதற்குப் பதிலாக நாபகர்ஷதி என்று திருத்திக்கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டார்.

இந்தக் கவி பாடியது திவ்ய ஞானியாகிய வேதவியாச முனிவர். அவருக்கு இந்த விஷயம் தெரிந்தது. ஆகா! படிப்பின் மமதை இவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டதே' என் கருத்தை மாற்றுவதுமட்டு மல்லாமல் உலகத்திற்கே தப்பான போதனைசெய்து விடுகிறாரே! இதற்கு அவருக்கு அனுபவ பூர்வமான ஒரு எடுத்துக்காட்டு அவசியம் என்று அவர் நினைத்தார் அடுத்தநாள் இரவு வந்துசேர்ந்தது; அமாவாசை இருட்டுபோல் எங்கும் ஒரே இருளாக இருந்தது. புயலும், மழையும் வந்து ஆசிரமத்தை நடுங்கவைத்து விட்டது. நமது பௌராணிகர் இரண்டு அறைகள் கொண்ட அவரது ஆசிரமத்தில் அவர் இருக்கும் அறையிலுள்ள சிறு ஜன்னல் வழியாக வெளியே பார்த்துகொண்டிருந்தார்.

திடீரென்று மின்னல் ஒளியில் ஆசிரமத்திலிருந்து சற்று தூரத்தில் ஒரு மரத்தடியில் ஒரு பருவமங்கை நிற்பது அவர் கண்களில் தென்பட்டது. முதலில் பெண்களைப்பற்றி நினைப்பதே நமக்குச் சரியில்லை என்று முகத்தைத் திருப்பி உள்ளே சென்றார். ஆனால் அவர் சற்று நேரத்தில் மனதில் நிம்மதி இழந்துவிட்டார்! அய்யோ பாவம் யாரோ இவள். எப்படியோ இங்கு அகாலத்தில் வந்து சேர்ந்துவிட்டாள் என்னென்ன கஷ்டங்களுக்கோ ஆளாகிவிட்டாள். அவளுக்கு ஆதரவு கொடுக்கவேண்டியது நமது கடமையல்லவா என்ற உணர்ச்சி எழுந்தது. அவள் ஒருவேளை தீண்டத்தகாதவளாயிருந்தால் நாம் பாபத்திற்கு ஆளாய்விடுவோமே! நாம் செய்த தவமெல்லாம் பாழாய்விடுமே என்ற அச்சம் அடுத்தாற்போல் வந்தது. ஆபத்தில் பாபமில்லை. எப்படியும் நாம் உதவி செய்ய வேண்டியது அவசியம் என்று மறுபடியும் கருணை தோன்றியது ஆக அவர் மனதில் ஒரே குழப்பம். கடைசியில் அவளைக் கூப்பிட்டு அடைக்கலம் கொடுப்பது என்று தீர்மானப் படுத்தினர்.

கதவைத் திறந்தார். மழை பேய்மாரியாகப் பெய்து கொண்டிருந்தது இடியும் மின்னலும் பயங்கரமாயிருந்தது. எங்கும் ஒரே இருள். மின்னல் ஒளியில் அவள் இருக்குமிடத்தைத் தெரிந்து பெண்ணே! யார் நீ? எங்கிருந்து இந்த வேளையில் இங்கு வந்து சேர்ந்தாய்? யாராயிருந்தாலும்சரி எனது ஆசிரமத்தில் இரண்டு அறைகள் உள்ளன. அதில் ஒன்றில் இன்று இரவு தங்கிவிட்டு விடிந்ததும் உன் இஷ்டப்படி வேண்டிய இடத்திற்குச் செல்லலாம் என்று சத்தமிட்டுச் சொன்னார்.

அதற்கு அவள் இடறிய குரலில் பதில் கூறினாள். "அடியாள் நான் தீண்டத்தகாத ஒரு அனாதைப் பெண். வழி தவறி இங்கு வந்துவிட்டேன். மன்னிக்கவும். உபகாரத்திற்கு நன்றி. நான் தங்கள் ஆசிரமத்திற்கு வரமாட்டேன். தங்களுக்கும் அது தகாது. நான் செய்யும் ஒரு பெரிய பாவமும் ஆகிவிடும்" என்றாள். பதில்கேட்டு ஆச்சரியப்பட்ட முனிவர், "நீசொல்லுவது முற்றிலும் சரி. ஆனால் ஆபத்தில் இதற்குப் பாபமில்லை என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன" என்று சொல்லி மீண்டும் அவளை அன்புடன் அழைத்தார். அப்போது அப்பெண்ணும் அதற்கிணங்கி ஆசிரமத்தில் அடுத்த அறையில் தங்கினாள். இரவு பாதி முடிந்திருக்கும். பக்கத்து அறையில் இருக்கும் முனிவருக்குப் பலவிதமான எண்ணங்கள் தோன்றி மறைந்தன. மனது ஒரு நிலையில் இல்லை. மின்னல் ஒளியில் இரண்டு மூன்று தடவை கண்ட மங்கையின் தோற்றம்; வேலையும் வெல்லும் விழிகள், துடித்த கன்னங்கள், உயர்ந்தெழுந்த மார்பு, துடிக்கும் உதடுகள்; எல்லாம் அவர் மனதில் மாறிமாறி வந்து கொண்டிருந்தன. அவர் பொறுமை இழந்தார். சுருக்கமாகச் சொன்னால் சிறிது நேரத்திற்குள் அவர் அப்பெண்ணிருக்கும் அறைக்குள் ஏறிக் குதித்துவிட்டார்.

அவளோ பயந்து என்னசெய்வது என்று தெரியாமல் பலவாறு முறையிட்டாள். அதுஒன்றும் காதல் பரவசனாயிருந்த நமது முனிவர் காதில் ஏறவில்லை. அவருடைய ஆசைக்கு இணங்கும்படி அவளை மன்றாடிக் கேட்டார். பயப்படுத்தியும் பார்த்தார்; அவள் அசையவில்லை. கடைசியில் பலவந்தம் ஏற்படும் என்ற நிலைவந்தது. அப்போது அவள் சொன்னாள் "சுவாமி உங்கள் உத்தரவுப்படி செய்கிறேன்; ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை. என்னை நீங்கள் மணந்துகொள்ளவேண்டும். அதற்கு எங்கள் ஜாதி வழக்கப்படி மணப்பெண்ணைத் தோளில் எடுத்து விட்டைச்சுற்றி ஒரு வளயம்வந்து வாசல்படியில் உட்காரவைத்துக் காலில்விழுந்து வணங்கவேண்டும்" என்றாள்.

(தொடரும்.)

# சந்திரனில் தண்மை

திரு. T. N. அருணாசலம் B. A., B. L.,

சந்திரனின் மேற்பரப்பில் விண்வெளி வீரர்களால் தோண்டி எடுக்கப்பட்ட மண் ஈர நைப்புள்ளதாகக் காணப்பட்டதென்றும் இது சம்பந்தமாக மேலும் கிடைத்த சில விபரங்களிலிருந்து சந்திரனின் தரையின் அடியில் தண்ணீர் பனிக்கட்டி வடிவில் இருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு என்று நிபுணர்கள் கருதுவதாகவும் கென்னடிமுனை விண்வெளி நிலையத்தார் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்திகளால் அறிகின்றோம். மேலும், விண்வெளி வீரர்கள் அனுப்பிய மேற்கண்ட விபரங்கள் நிபுணர்களை வியப்பில் ஆழ்த்தியதாகவும் சொல்லப்படுகிறது. வியப்பின் காரணம், இதுகாறும் சந்திரனில் தண்ணீர் இருக்க இடமில்லை என்றே நிபுணர்கள் கருதிவந்ததேயாகும். இது சம்பந்தமாகத் தற்போது கிடைத்துள்ள விபரங்களின் அடிப்படையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுமாதலாலும், நேரிடையே சந்திரனின் தரையியல்பைப் பரிசோதித்தறிய மேலும் வாய்ப்புகள் உள்ளமையானும் நிபுணர்கள் சரியானதொரு முடிவுக்கு வரலாமென நாம் எதிர்பார்க்கலாம்.

இத்தச் சூழ்நிலையில், திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமான் இறைவனது நுால சூக்குமத்தை வியந்து கூறும் வகையான், திருவண்டப் பகுதி என்ற அகவலில் சூரியன், சந்திரன் மற்றும் ஐம்பெரும் பூதங்களின் இயல்புகளைப்பற்றிச் சொல்லும் செய்தி நம் சிந்தனைக்கு உரியதாகிறது.

" ..........................நாள் தோறும்
அருக்கனில் சோதி அமைத்தோன்; திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன்; திண்திறல்
தீயில் வெம்மை செய்தோன்; பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன்; மேதகு
காலில் ஊக்கம் கண்டோன்; நிழல்திகழ்

நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் : வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் ; என்று என்று
எனைப்பல கோடி எனைப்பல பிறவும்
அனைத்து அனைத்து அவ்வயின் அடைத்தோன் ''

என்பது திருவண்டப் பகுதியில் நம் சிந்தனைக்குரிய பகுதியாகும். குறிப்பாக, சந்திரனைப்பற்றி மணிவாசகர் சொல்லியிருப்பது நம் கவனத்தை ஈர்ப்பதாகும்.

அருக்கன் வெய்ய கிரணங்களை யுடையோனாயினும் அவனுக்கு இறைவன் அமைத்த தனி இயல்பு சோதியே (வெம்மை அடுத்தபடிதான்) என்பது மணிவாசகர் கூற்று. அதுபோன்று, தீயினுக்கு ஒளியும் ஒரு குணமாயினும் அதன் தனி இயல்பு அதற்கு இறைவன் செய்த வெம்மையே. அதுவேபோல, இறைவன் மதியில் வைத்த தனி இயல்பு தண்மை என்பார் மணிவாசகர்.

மேற்கொடுத்துள்ள செய்யுட் பகுதியில் அமைத்தோன், வைத்தோன், செய்தோன், கண்டோன், நிகழ்ந்தோன், அடைத்தோன் என்ற சொல்லாட்சிகள் நம் சிந்தனைக்குரியன. அண்டத்தின் பகுதியான சூரியன், சந்திரன், மற்றும் ஐம்பெரும் பூதங்களல்லாமல் "எனைப்பல கோடி எனைப்பல பிற" பொருள்களிலும் அதனதனிடம் ஓர் தனி இயல்பை அடைத்திருக்கின்றான் இறைவன். 'அடைத்து' என்ற சொல்லால், நமக்கு விளக்கப்படுவது சொல்லப்பட்டதொரு பொருளில் சொல்லப்பட்டதொரு இயல்பு அதன் உள்ளீடாக அமைக்கப்பட்டதொன்று என்றுதானே கொள்ள வேண்டும்

'தண்மை' என்ற சொல் சந்திரனின் கிரணங்களின் தன்மையை மட்டுமே குறிப்பதாக ஓர் ஐயம் எழலாமல்லவா? ஆனால், வைத்த, அடைத்த என்ற சொற்கள், மூலப் பொருட்களின் உள்ளீடே காணும் இயல்புகளைக் குறிப்பனவாகவே கொள்ள வேண்டுமாதலால், மணிவாசகர் புலப்படுத்துவது, சந்திரனுக்கு அதன் தனித் தன்மையாகத் தண்மையை அல்லது குளிர்மையை இறைவன் அதனூடே வைத்திருக்கிறான் என்பதே என்று கொள்வது பொருத்தமாகும்.

மேலும், சந்திரனுக்குச் சூரியனைப்போல் தன்னகத்தே இயல்பான சோதியில்லை என்பதும், அதனின்றுவரும் கிரணங்கள் அதன்மீது வீசப்பட்டு அது பிரதிபலிக்கும் சூரிய கிரணங்களே

என்பதும் வெளிப்படை. எனவே. சந்திரனின் கிரணங்கள் என்று சொல்வதே கானல்நீர், முதலைக்கண்ணீர், வெள்ளைக் காகம் என்பனபோல் ஒரு இல்பொருள் ஆகிறது. இதை misnomer என்று ஆங்கிலத்தில் சொல்வதுபோன்று எனலாம். ஆகவே, மணிவாசகர் சந்திரனின் தன்மையாகத் தண்மையைச் சொல்வது மூலப்பொருளாகிய சந்திரனுக்கேயல்லாது அதன் கிரணங்கள் எனப்படும் இல்பொருளுக்கு உரியதாகாது. காரண காரிய அடிப்படையாகப் பேசுமிடத்தும், தன் அகத்தே தண்மை இருந்தாற்றானே தன்மீது விசப்பட்டுப் பிரதிபலிக்கப்படும் கதிரவனின் வெய்ய கிரணங்களைச் சந்திரன் தண்மையாக மாற்ற இயலும் என்பதும் சந்திரனின் தண்மைக்குச் சான்றாகக் கொள்ளலாம்.

சந்திரனின் உள்ளீடே தண் (மையான) நீரோ, பனிக் கட்டிப் படலமோ, அல்லது வேறு குளிர்ந்த திரவப்பொருளோ காணப்படுமாயின், அல்லது இருப்பதாக நிபுணர்களால் நிச்சயிக்கப்படுமாயின அது மணிவாசகத்தில் பற்றுடையோர்க்கு மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.


" ஞானசம்பந்தம் "

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கிழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 3-00. வெளிநாடு ரூ. 4-00

செயலாளர்,

" ஞானசம்பந்தம் " காரியாலயம்.
தருமபுரம். மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.

# தம்பிரான் தோழன்

" தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவான், வேண்டுவார் வேண்டுவதே ஈவான், பொன்னும் மெய்ப்பொருளும் தருவான், போகமும் திருவும் புணர்ப்பான், தாயாய் முலையைத் தருவான், பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிவுடையான், ஈன்றாளுமாய் எந்தையுமாய் உடன்தோன்றினராய் நிற்பான்" என்றாற்போல்வன இறைவனது பேரருட்டிறத்தை அவனை அடைந்து அனுபவித்த அடியவர் பலர் பற்பலவாறாக எடுத்து அருளிச்செய்வன. அவர்களது அருள்மொழியின் பொருள் அவர்களது வாழ்க்கையிலே அனுபவமாகவும் விளங்கினமையை நம்போன்றவர் நன்குணர்ந்து பயன் பெறுதல் வேண்டும்.

"சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க, பத்தி வலையிற் படுவோன் காண்க" என்னும் திருவாசக அடிகள் இறைவனது அருமையையும், எளிமையையும் ஒருங்கெடுத்து விளக்குவன. இறைவன் சேட்சியன் - தூரத்தில் உள்ளவன் என்றால் எவ்வளவு தூரத்தில் உள்ளவன் என்பதை, 'சித்தமும் செல்லா' என்ற தொடர் நன்கு விளக்குகின்றது. சித்தம் - உள்ளம். கையால் பற்றமுடியாத தூரத்தில் உள்ள பொருளைக் கண் சென்று பற்றும். கண்ணும் சென்று பற்றமுடியாத தூரத்தில் உள்ள பொருளைச் சொல் சென்று பற்றும். சொல்லும் செல்ல முடியாத தூரத்தில் உள்ள பொருளை உள்ளம் சென்று பற்றும். அவ்வுள்ளமும் செல்ல முடியாத தூரத்தில் இறைவன் உள்ளான் என்றால், அவன் உள்ளது எத்துணைத்தூரம் என்பது விளங்கும். அத்துணைத் தூரத்தில் உள்ள அவன் அதே சமயத்தில் நம்மை விட்டு அகலாமல் கூடவே இருக்கின்றான் என்றும் அருளாளர் அருளிச் செய்கின்றனர். எனவே அவன் ஒரேசமயத்தில் ஒரு சாரார்க்கு எவ்வாற்றாலும் எட்ட முடியாத தூரத்திலும் மற்றொரு சாரார்க்குச் சிறிதும் அகலாத அணிமையிலும் இருக்கின்றான் என்பதாகின்றது.

எவருக்கும் எட்டமுடியாத தொலைவிலும், எவருக்கும் மிக அணிமையிலும் இருக்கின்றான் என்பதை விளக்குவதற்கே மாணிக்கவாசகர் அவனை, "பத்தி வலையிற் படுவோன்" என்றார். படுவோன் - அகப்படுபவன். 'பத்தி வலையிற் படு

வோன்' எனவே, பத்தியுள்ளவர்க்கு மிக அண்மையில் உள்ளான் என்பது விளங்கிற்று. பத்தி உள்ளவர்க்கு மிக அண்மையில் உள்ளான் எனவே, சித்தமும் செல்லாச் சேட்சியனுதல் பத்தி இல்லாதோர்க்கு என்பது விளங்கும். எனவே பத்திநெறியில நில்லாதவர் அவனைப் பலவாற்றாலும் தேடித் தேடி இளைத்து, 'இறைவன் எங்கும் இல்லை' என்று சொல்லி நின்றுவிடுகின்றார்கள். அதே சமயத்தில் பத்திநெறியில் நிற்பவர்கள், 'இறைவன் இதோ இருக்கின்றான்; அவனைக்கண்ட எங்கள் கண்ணும், மனமும் குளிர்ச்சியடைகின்றன. கனியினும், கட்டிபட்ட கரும்பினும் பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும், தனிமுடி கவித்து ஆளும் அரசினும் அவன் எங்களுக்கு இனிக்கின்றான். அவ்வின்பம் மாளா இன்ப மாகடலாய்க் கரையின்றி நிற்கின்றது' என்றெல்லாம் பாடுகின்றனர்; பரவுகின்றனர். பக்தியுடையோர்க்கு இங்ஙனம் அனுபவப் பொருளாய்ப் பேரின்பத்தை வழங்குகின்ற இறைவன் பத்தியில்லாதோர்க்கு அறவே இல்லாதவனாகி விடுகின்றான் என்பதை வாதவூரடிகள், "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி" என்றெல்லாம் கூறியபின். உண்மையுமாய் இன்மையுமாய்" என்று அருளினர், அப்பர் பெருமானும், "காதல் செய்யத் • துணிவன சீலத்தராகித் தொடர்ந்து விடாத தொண்டர்க்கு • அணியயண. சேயன தேவர்க்கு ஐயாறன் அடித்தலமே", "மிக்க அன்போடு அழுவார்க்கு அமுதங்கள் காண்க ஐயாறன் அடித்தலமே", "பொய்பொருந்தா அன்பர்க்கு அணியண காண்க ஐயாறன் அடித்தலமே" என்று அருளினர்.

பத்திசெய்யும் பத்தர்க்கு இறைவன் மிக அணியனாய் நிற்கும் பொழுது பத்தர்களது மனப்பாங்கு பற்பல வகையாய் அளவின்றி இருத்தலால், அவர்கட்கு இறைவன் அணியனாய் நின்று அருள்செய்யும் முறையும் அளவின்றியேயிருக்கும் இதனைத் திருஞானசம்பந்தர், "ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதி மாண்பும்-கேட்பான்புகின் அளவில்லை; கிளக்கவேண்டா" என்று அருளிச்செய்தார். இவ்வாறு ஆட்பாலவர்க்கு அவன் அருளிய முறை அளவில்லனவாய் இருத்தல் அருளாளரது வாழ்க்கையில் அனுபமாகக் காணப்பட்டன.

### தம்பிரான் தம்பிரான் :

சலம்பூவொடு தூபத்தினையும், தமிழோடு இசைபாடுதலையும் மறந்தறியாதவராய் இருந்த திருநாவுக்கரசரை அறவுணர்வும்,

சமய ஆராய்ச்சியும் மிக்கிருந்த அவரது மனநிலைக்கேற்ப, ஆண்டவனது அருள்நிலையைத் தெளியாமல் அறத்தையே பெரிதெனக் கொண்ட சமண் சமயத்திற்செலுத்திப் பின் சூலை நோயைக் கொடுத்து, அது மணி மந்திர ஔடதங்களால் நீங்காதவாறு செய்துபின் அவரிடத்தில் அன்புடையார் புலரும் 'இந்நோய் இப்பொழுது உடற்கூற்றால் விளைந்ததன்று; உடற்கூற்றால் விளைந்ததாயின் மணி மந்திர ஔடதங்களால் நீங்குதல் திண்ணம். ஆகவே, இது முற்பிறப்பில் இவர் செய்த செய்கையால் இவரது வாழ்நாளை இடையறுக்க வந்த வினைவிளைவு. எனவே இதனை யாராலும், எவ்வாற்றானும் நீக்குதல் இயலாது' என்று கைவிட்டுவிட அந்நிலையில் அவர் தம் தமக்கையார் சொற்படி அஞ்செழுத்தோதித் திருநீற்றை உருவார அணிந்து கோயிலுக்கு வந்து தன்னை வணங்கித் துதித்தவுடனே அச்சூலை நோயை முற்றிலும் நீக்கித் தன்னை அடைந்தாரை மறுமையிலன்றி இம்மையிலும் வாழ்விக்கும் தனது அருளாற்றலின் வன்மையை இனிது புலப்படுத்தி இறைவன் ஆட்கொண்டான். அப்பொழுது அவர், 'இறைவன் எங்கே இருக்கின்றான்? இருந்தால் காணப்படட்டுமே' என்று வாதிட்டுக்கொண்டிருந்த தமக்கு அவன் கைப்பொருள்போலக் கிடைத்துவிட்டதை அறிந்து, "தேடிக்கண்டுகொண்டேன் - திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்" என்று களிப் பெய்தியதுடன், எல்லாம், தம்மாலே ஆவனவாகக் கருதிப் பொய்ம்மையில் நின்று ஆராயும் ஆராய்ச்சியிலே நாளெல்லாம் கழிந்து போனாலும் இறுதியிலேனும் தபக்கு நற்பேறு கிடைத்தமைக்கு மகிழ்ச்சியுறும்பொழுது, 'எல்லார் உள்ளங்களிலும் இருந்து அவரவர் எண்ணங்களை எப்பொழுதும் அறிகின்ற இறைவன் தம உள்ளத்தில் இருந்து தாம் அவனை நம்பாதிருந்த நிலையையும் அறிந்திருந்தானன்றோ' என்று எண்ணினார். அதனால் இறைவன்முன்னே அவருக்குப் பெரியதோர் வெட்கம் உண்டாயிற்று. பின்னர்த் தமது அறியாமையை நினைந்தார்; அவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது; அதனால், விலா இறச் சிரித்துவிட்டார். *

---

* கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியே னாகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன்;
உள்குவார் உள்கிற் றெல்லாம் உடனிருந் தறிதி யென்று
வெள்கினேன், - வெள்கி நாணும் விலா இறச் சிரித்திட் டேனே.
(திருமுறை - 4.75.3.)

அதன்பின் அவர், இனிய கனிகளும், இன்னாத காய்களும் தம் கையில் இருக்க, இனிய கனிகளை உண்ணாது, இன்னாத காய்களையே உண்டாற்போன்ற தமது செயலுக்கு இரங்கி' 'அச்செயலுக்குத் தீர்வாக யான் முத்தொண்டும் செய்வேன்' என உறுதிபூண்டு, மனத்தொண்டாகிய திருப்பதிகம் பாடுதல் என்பவற்றோடு உழவாரப் பணியாகிய கைத்தொண்டினையும் எங்கும் செய்யும் தொண்டராகவே என்றும் இருந்தார். இறைவனும் அவரது விருப்பத்திற்கு இணங்க என்றும் அவருக்கு ஆண்டானாகவே இருந்து, அவருடைய திருமேனியில் இடபக் குறியையும் சூலக் குறியையும் பொறித்தான்; 'நல்லூர்க்கு வருக' என்று கட்டளையிட்டு அவரது சென்னிமேல் திருவடி சூட்டி அருள்புரிந்தான்; படிக்காசை வாசியில்லாக் காசாகக் கொடுத்தான். திருமறைக்காட்டில் தன்னைப் பன்முறை கூவி அழைத்த திருப்பதிகம் முற்றியபின் கதவைத் திறந்தான்; 'வாய்மூர்க்கு வருக' என்று கட்டளையிட்டு நெடுந்தூரம் அழைத்துச்சென்று அங்கே காட்சி வழங்கினான். பழையாறை வடதளியில், 'சமணரால் மறைக்கப்பட்ட உம்மை முன் போலத் தரிசித்தபின்னன்றி உண்ணமாட்டேன்' என்று உணவு கொள்ளாமல் பாடுகிடந்த அவரது எண்ணத்தைச் சோழ மன்னனைக் கொண்டு முடிப்பித்தான். தம்மை ஆளும் நாயகன் இருக்கையாகிய கயிலையைக் காணவேண்டும் என்னும் அவாவினால் நெடுந்தூரம் சென்று பல துன்பத்திற்கு உள்ளாகி ஓரிடத்தில் உணர்ச்சியற்றுக் கிடந்த அவரை 'நாவுக்கரையனே எழுந்திரு' என்று எழுப்பி, 'இக் குளத்தில் மூழ்கி ஐயாற்றில் வந்து கயிலைக் காட்சியைக் காண்' என்று பணித்து, அங்ஙனமே கயிலைக் காட்சியை அங்கு வழங்கினான். இறுதியில் அவர், "புண்ணியா உன் அடிக்கே போதுகின்றேன்" என்று விண்ணப்பித்தபொழுது திருப்புகலூரில் தனது திருவடியில் சேர்த்துக் கொண்டான். இறைவன் அப்பரை ஆட்கொண்டது அருள் புரிந்தது இவ்வாறு. ஆண்டான் அடிமை முறையிலாம். இறைவன் உண்மையிலே எல்லார்க்கும் ஆண்டவன்தான். அதனால் எல்லா உயிர்களும் அவனுக்கு அடிமைகள்தாம். அதனைக் குறிக்கவே இறைவன் 'தம்பிரான்' எனப்படுகின்றான். தம - எல்லா உயிர்கட்கும். பிரான் - தலைவன். எனவே, நாவுக்கரசருக்கு என்றும் தம்பிரான் தம்பிரானாகவே இருந்து அருள் செய்தான் என்பது விளங்குகின்றது.

**தம்பிரான் அடியான் :**

தம்பிரான் தம்பிரானேயாய் இருந்ததில் வியப்பில்லை. அவன் தன் அடியார்க்கு அடியானாய் வந்த நிலை உண்டு;

அதுவே வியப்பைத் தருவது. மதுரை மாநகரில் பிட்டு விற்று வந்த 'வந்தி' என்னும் அடியவளுக்கு வையையாற்றின் கரையை அடைக்கும் பலபங்குகளில் ஒருபங்கு ஏற்பட்ட காலத்தில் ஏனையோர், 'இவள் எங்கே இதனை அடைக்கப் போகின்றாள்? இவளுக்குக் கூலியாளாக எவன் வருவான்? எப்பொழுதும் ஆலவாய் அப்பனே, ஆலவாய் அப்பனே என்று சொல்லி அவனுக்கே பிட்டினை முதலில் படைத்துவந்தாளே; அந்த ஆலவாய் அப்பன் இப்பொழுது வந்து இவள் பங்குக் கரையை அடைப்பானோ?' என்று எண்ணிய தவறான எண்ணம் நீங்குமாறு இறைவன் தானே மண் சுமக்கும் கூலியாளாகச் சென்று பாண்டியனால் பிரம்படியும் பட்டு அவளது பங்குக் கரையை அடைத்தான் அன்றோ? அந்தக கருணையை எண்ணும்பொழுது மனம் அனலிற்பட்ட மெழுகாக உருகி மாணிக்கவாசகர்,

"கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு -
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்"

என்று பாடுகின்றார். இனி அம் மணிவாசகர் சொன்னபடி குதிரை வரவில்லையென்று பாண்டியன் சினந்தபொழுது மற்றவர்கள், 'கொண்டுபோன பொன்னையெல்லாம் கோயிலுக்கும் குளத்துக்கும் செலவுசெய்த இவருக்கு அந்தக் கோயிலிலிருக்கும் இறைவன் இப்பொழுது குதிரைகொண்டு வருவானோ? என்று பேசியபொழுது இறைவன் தானே குதிரைச் சேவகனாய் குதிரை கொண்டுவந்து கொடுத்துச் சென்றான். மாணிக்கவாசகருக்கு இறைவன் அருள் செய்தது, ஆசிரிய மாணவ முறையிலாம்.

## தம்பிரான் தந்தை :

ஞானசம்பந்தருக்கு இறைவன் 'தம்பிரான்' என்னும் அளவில் நில்லாது தந்தையாய் நின்று, அவரைத் தன் மைந்தராகக் கொண்டு அருள்புரிந்தான். ஞானசம்பந்தருக்கு அப்பிறவி உண்டாகவேண்டிய நிலைமை இல்லை; இறைவனே அதனை அவருக்குத் அருளினான் என்பதை அவரே ஓர் இடத்தில், "திருந்தடி மறக்குமா றிலாத என்னை மையல் செய்திம் மண்ணின்மேல் பிறக்குமாறு காட்டினாய்"* என்று அருளிச் செய்தார். இறைவனது திருவடியை மறந்து செய்யும் செயல்களே

* திருமுறை - 2.98.5.

பிறவிக்கு ஏதுவாகிய 'வினை' எனப்படும். ஞானசம்பந்தர் அவரது முற்பிறப்பில் இறைவன் திருவடியைமறக்கும் நிலையே இல்லாதிருந்தவர்என்பதுமேற்காட்டியபகுதியால்அறிகின்றோம். இதனையே சேக்கிழார் "பண்டு திருவடிமறவாப் பான்மையோர்" என்றார். இங்ஙனம் மறவாதிருந்தோர் யார் எனபதைச் சேக்கிழார் சுட்டிக் காட்டவில்லை. என்றாலும் பிறர், 'அவர் முருகக் கடவுளே' என்கின்றனர். அதனால், அவர் பிறந்திருக்க வேண்டுவதில்லை. 'ஆயினும், இறைவனே ஒரு சிறு மையலை அவருக்கு உண்டாக்கி அதனை முன்னிலையாக வைத்து அவரை இம்மண்ணின்மேல் பிறக்கச்செய்தான்' என்பதும் மேற்குறித்த பகுதியில் அவர் குறிக்கின்றார். 'இறைவன் செய்த மையல் இது' என்பது எங்கும் விளக்கப்படவில்லை சிவ நாடாகிய தமிழ் நாட்டில் பரசமயம் மேலோங்கிச் சிவநெறி ஒளிகுன்றியிருந்தமை பற்றி வருந்திய வருத்தமே அதுவாதல் வேண்டும் என நாம் கருதலாம். ஆகவே, பரமசமயம் நிராகரித்து நீறு ஆக்கும் புனைமணிப்பூண் புதல்வராக‡ அவரை இறைவன் இவ்வுலகில் பிறப்பித்தான். தான் செய்யத்தக்க அருளாட்சி முறையைத் தன் புதல்வரைக் கொண்டு செய்விக்கும் முறையில் அவரைப் பிறப்பித்த பின்பு அவருக்கு அம்பிகையின் பாலை அளிப்பித்து ஆளுடையபிள்ளையாராகக் கொண்டான். பின்னர் அருளாட்சித் தலைமைக்குரிய சிவிகை குடை, சின்னம் என்பவற்றையும் அளித்தருளினன். திருவீழிமிழலையில் வாசிபட்ட காசைக் கொடுத்தான். தனனிடம்உள்ள வாசிபட்ட காசை மகனார்க்குக் கொடுக்கலாமே யல்லது அடியார்க்குக் கொடுக்லாகாதன்றோ? "சேக்கிழாரும்; திருமாணர்ஆதலினல் - காசு வாசியுடன் பெற்றார் "என்றார்* ஆயடுதுறையில் ஆயிரம்பொன் கொண்ட பொற்கிழியை உலவாக் கிழியாகவழங்கினன். பாண்டி நாட்டில்சமணர்கள் இட்டதீயினல்தீங்குறுதவாது காத்துஅதுவே வாயிலாக அங்குத் தொடர்ந்த பல வாதத்திலும் வெற்றிபெறச் செய்து, "ஞாலம் நின்புகழேமிக வேண்டும்" என விரும்பிய அவரது விருப்பத்தை நிறைவு செய்து, அந்நாட்டு மக்களே அன்றி அரசனும் அரசியும் அவருக்கு ஆட்படச் செய்தான். திருக்கொள்ளம்பூதூரில் ஓடத்தை ஒருவரும் ஓட்ட இயலாத வெள்ளத்தில் அது தானே ஓடச்செய்து அவரைப் பரிசனங்களுடன் கரையேற்றினன். திருமயிலையில் சிவநேசர் என்பவர் தமது அன்புகாரணமாக ஞானசம்பந்தருக்கே மணம்செய்து

‡பெரியபுராணம் - ஞான 19.

* பெரியபுராணம் - நாவுக். 260.

கொடுக்கவேண்டும் என்று வைத்திருந்த மகளை அவ்வாறன மணம் பொருத்தம்உடையதன்று என்று கருதி ஞானசம்பந்தரை அவளுக்குத் தந்தை என்று எண்ணும் நிலையை வருவித்தான். பின்பு நல்லூர்ப் பெருமணமாகிய வேட்டகத்தில் பலரும் சூழ முறைப்படி திருமணத்தை நடத்தி அவரையும், அவரது காதலியையும் மணக்கோலத்தோடு, திருமணங்காண வந்த பலருடன் தன்பால் அழைத்துக்கொண்டான். எனவே ஞானசம்பந்தருக்குத் தம்பிரான் தந்தையாய் இருந்து அருள் புரிந்தமை விளங்கும்.

## தம்பிரான் தோழன்

இறைவன் தன் அடியார்க்கு ஆண்டவனாய் இருந்து அருள் புரிதல் இயற்கை. அம்மையப்பனாய் இருந்து அருள் செய்வதும் இயல்பே. ஆசிரியனாய் வந்து அருள்ஞானத்தை வழங்குவதும் ஏற்புடையதே. அடியார்போல வந்தது ஒரு திருவிளையாட்டே. அவன் தன் அடியாரைத் தன்னேடொப்பத் தோழராகக் கொண்டு தன் தோழமையை அவருக்குத் தந்து என்றும் அத்தோழமை முறையிலே அருள்புரிந்தான் என்றல் அது வியப்பினும் வியப்பே. தம்பிரானாகிய சிவபிரான் தனக்குத் தோழராகக் கொண்டு தனது தோழமையைத் தந்தது சுந்தரருக்கேயாம்.

தேவ கூட்டத்தவருள் குபேரனைச் சிவபெருமானுக்குத் தோழன் என்பர். மக்களுள் இறைவனுக்குத் தோழராகியவர் சுந்தரரே. சுந்தரர் இறைவனுக்குத் தோழராகியது அவர் தாமேயன்று; இறைவனே அவரை வலிந்து தோழராகக் கொண்டான். முதலிலே அவரை அவன் ஆட்கொண்டதும் வலிந்து சென்றுதான். இறைவன் தம்மை ஆளாகக் கொள்ளுதல்வேண்டும் என்று எத்துணையோபேர் எத்துணையோ தவத்தைச் செய்கின்றனர், செய்தும் இறைவன் தானே வலிந்து சென்று அவருடன்வாதிட்டு அவரால் 'பித்தன்' என்றும் இகழப்பட்டு ஆட்கொண்டான் என்றல் அவரது பத்திப் பெருக்கு நம்மனோர் அறியும் அளவினதன்று என்பது புலனாகும்.

ஆட்கொண்ட காலத்தில், 'பித்தன்' என்று இகழுமாறு சென்ற இறைவன், பின்னர் அவரது சென்னிமேல் தனது திருவடியைச் சூட்டும் பொழுதும் அவர், யாரையா நீர் என் தலைமேல் கால்வைக்கின்றீர்? என்று இகழும்படியே சென்று சூட்டினன்.

இறைவன் தனது திருவடியைத் தம் சென்னிமேல் சூட்டுதற்கு எத்துணைப்பேர் எவ்வளவு தவங்கிடக்கின்றனர்கள்? அவர்கட்கெல்லாம் அதனைச் செய்யாது இவரிடம் தானேசென்று இவரது சென்னிமேல் பன்முறை தனது திருவடியை இறைவன் வைத்தருளினன் என்றால், இவரது தவத்தின் அளவு சிறிதோ! அதனாலன்றோ, இவரை, 'மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்' என்று இறைவன் சங்கிலியாருக்கு அறிமுகப்படுத்தினன்.?

தானே சென்று வலிய ஆட்கொண்டு, பின்னரும் தானே சென்று திருவடியைப் பல்கால் சூட்டியதோடு, 'நம்மை உனக்குத் தோழமையாகத் தந்தோம்' என்று தானகவே இறைவன் அருளிச்செய்தான். அதனால், 'நீ எனக்கு அடிமை' என்று வாதிட்டு அடிமைகொண்ட காரணத்தால் சுந்தரருக்குத் தம்பிரானும் விளங்கிய இறைவன் பின் அவருக்குத் தோழனாகவும் ஆய்விட்டான். குபேரன் செல்வத்தால் சிவபெருமானுக்குத் தோழன்; சுந்தரர் அவனுக்கு ஞானத்தால் தோழர். செல்வத் தோழன் சிவபெருமானுக்கு எப்பொழுதோ கிடைத்துவிட்டான்; ஞானத்தோழர் அவருக்குச் சென்ற சில நூற்றுண்டுகளுக்கு முன்னர்த்தான் கிடைத்தார். இதை எடுத்துப் பாராட்டுகின்றவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.

அறிந்து செல்வம் உடையானும்
அளகைப் பதியான் தோழமை கொண்டு
உறழ்ந்த கல்வி யுடையானும்
ஒருவன் வேண்டும் என இருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை
துணைவா நினைத் தோழமைகொண்டான்
சிறந்த அறிவு வடிவமாய்த்
திகழும் நுதற்கட் பெருமானே.

தம்பிரான் சுந்தரருக்குத் தோழனாகிவிட்டமையால் தம்பிரானுக்குச் சுந்தரரும் தோழராய் விளங்கும் பெருமையைப்பெற்று விளங்கினர். சுந்தரர் இறைவனைத் தோழமை உரிமையோடு பாடிய பாடல்கள் பல; செய்யும்படி வேண்டிய செயல்களும் பல.

தனது ஒருமணத்தைத் தடுத்து நிறுத்திய அப் பெருமானால் இரு திருமணங்களைச் சுந்தரர் செய்துகொண்டார். முதல் திருமணத்தை முடித்துத் திருவாரூரில் வாழ்க்கை நடத்தும் பொழுது குண்டையூரில் தமக்கென்று ஓர் அடியவர் நெல்

கொடுக்க, அதனைத் திருவாரூருக்குக் கொண்டுவர ஆட்கள் தரவேண்டும் என்று அவர் தம் தோழராகிய இறைவனைக் கேட்டார். அதில அவர், இறைவனே, 'நீ ஒரு மனைவியன்று; இரு மனைவியரை உடையை. அதனால், மனைவாழ்க்கையில் வேண்டும் பொருள்கள் இல்லாதபொழுது பெண்கள் படும் துன்பத்தை நன்கறிவையன்றோ? அதனால், என் இல்லத்தில் என் மனைவி துன்பப்படாதபடி இந் நெல்லைத் திருவாரூருக்கு விரைவில் கொண்டு செல்லச் சில ஆட்களைத் தருக' என்று பாடியிருப்பதில் அவரது தோழமைச் சிறப்பு வெளியாகின்றது. இதைக் கேட்ட இறைவனும், "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே - இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற முறையில் தனது பூதங்களை அனுப்பி நெல் முழுவதையும் திருவாரூரில் கொண்டுபோய்ச் சேர்ப்பித்தான். திருப்புகலூரில் சுந்தரர் பொன்வேண்டியபொழுது கொடுக்காமல் அவர்படுத்து உறங்கிய செங்கற்களைப் பொன்னாக்கி இறைவன் விளையாட்டுக் காட்டினான். திருப்பாச்சிலாச்சிராமத்தில் தாம் பொன்வேண்டியும் தாராமையால் சுந்தரர் இறைவனை ஏச்சுரையாக 'இவரலாதில்லையோ பிரானார்'' என்று பாடி, இறுதிப் பாடலிலும் தாம் பேசினபேச்சைப் பொறுத்திலராயின் இவரலாதில்லையோ பிரானார் என்று பாடினார்.

திருமுதுகுன்றத்தில் இறைவன் பன்னீராயிரம் பொன் கொடுக்க அதனை எடுத்துக்கொண்டு செல்லாமல் நம்பியாரூரர், 'இங்கு ஓடுகின்ற மணிமுத்தா நதியில் இதனை இடுகின்றேன். பின்னர் இது திருவாரூர்க் குளத்தில் வரவேண்டும் என்று சொல்லி இட்டு அங்ஙனமே அப்பொன் முழுவதையும் ஆரூர்க் குளத்தில் பெற்றார்.

காஞ்சியில் ஓணகாந்தன் தளியில் சென்று பொன்வேண்டிப் பாடும்பொழுது அவர் 'எங்களுக்கு நீர் ஒன்றும் கொடாவிட்டால், நாங்கள் உங்களுக்கு ஆள் செய்யமாட்டோம்' என்று இறைவர்பால் தமக்குள்ள உரிமையை வற்புறுத்திப் பாடினார். நாகைக்காரோணப் பதிகத்தில் இஃது இன்னும் நன்கு விளங்குகின்றது.

திருவொற்றியூரில் சுந்தரர் சங்கிலியாரைத் திருமணம்செய்து கொள்ள விரும்பியபொழுது அவ்வம்மையார் பொருட்டுத் தாம் சூள்செய்யக் கோயிலுக்கு வரும்பொழுது இறைவனைக் கோயிலில் இல்லாது மகிழடிக்குச் சென்று இருக்கும்படி வேண்டினார். இது தோழமையாலன்றி வேறு எதனால் முடியும்? ஆயினும், இறைவர்

அவரை உண்மையாளராக்கும்பொருட்டுச் சூள்செய்தலை மகிழடியிலே நிகழ்தற்குரிய சூழ்நிலையை உண்டாக்கினர். பின்பு சுந்தரர் தம் சூள்பிழைப்பத் திருவொற்றியூரைவிட்டு அகலத் தொடங்கியபொழுது இறைவர் தமது நேர்மையினின்றும் சிறிதும் பிறழாது அவர் கண்கள் ஒளி இழக்கச் செய்தார். இது முறை கோடாத இறைமைத் தன்மையாயினும், மிகுதிக்கண் மேற் சென்று இடிக்கும் நட்பென்றும் கூறலாம். பின்னர்ப் பலவாறு அவர் அழுது வேண்டியபிறகே முதலில் இடக்கண்ணையும், பின்பு சிலநாள் சென்று வலக்கண்ணையும் இறைவர் அருளினர்.

திருவொற்றியூரை விட்டுப் பல இன்னல்களுக்கு ஆளாகித் திருவாரூரை அடைந்த சுந்தரர்மீது அவர்தம் மனைவி பரவையார் தீரா ஊடல் கொண்டு அவர் இல்லத்திற்கு வருதல் கூடாது என்று மறுத்தார். யார் சொல்லியும் அவ்வம்மையார் கேட்கவில்லை. இவ்வமயத்தில் இறைவர் சுந்தரரது இல்வாழ்க்கையில் உண்டாகிய தொல்லையை நீக்குதற்பொருட்டுத் தாமே ஒருமுறைக்கு இருமுறையாகத் திருவாரூர்த் தெருவில் தூது நடந்து பரவையாரது ஊடலைத்தீர்த்து ஒற்றுமைப்படுத்தினர். இறைவர் தம்மைச் சுந்தரருக்குத் தோழமையாகத் தந்ததன் உண்மையை நன்கு புலப்படுத்தியதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமோ! இறைவன் தன் அடியவர்க்கு இவ்வாறு தூதனாகவும் சென்று அருள்புரிகின்றான் என்றால், அவனை அடைந்து இன்புறுதலன்றோ செய்யத்தக்கது!


இறைவன் தன் தோழராகிய சுந்தரருக்கு அரசராகிய சேரமான் பெருமானையும் தோழராகச் செய்தருளினன். ஆகவே, தோழர்தந் தோழராகிய அவருக்காகத் திருவையாற்றில் காவிரியாறு வழிவிடச்செய்தான். இறுதியில் சுந்தரரை யானையின்மேலும், சேரமான் பெருமானைக் குதிரையின்மேலும் கயிலையை அடையச்செய்து, சுந்தரரை 'நம் தோழன் சுந்தரன் வருகின்றான்' என்று அங்கிருந்த முனிவர்கட்கும், சிவகணங்கட்கும் அறிவுறுத்தருளினன். இவ்வாறு அனைவர்க்கும் தம்பிரானாய் உள்ள இறைவன் சுந்தரருக்குத் தோழனாகி அருள்புரிந்தமையை நினைக்கின் எப்படிப் பட்டோர்க்கும் நெஞ்சம் நெக்குருகாமல் இராது! சுந்தரர் இத்தன்மையை நினைந்து பாடிய இடங்களும் பெரிதும் அருமையுடையன.

ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய், யான்செய்யும், துரிசுகளுக்கு உடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே.

தூதனை என்றனையாள் தோழனை......
காண்பதும் என்றுகொலோ!

.........அடியேற்கு எளிவந்த
தூதனைத் தன்னைத் தோழமை யருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனை நள்ளாறனை அமுதை
நாயினேன்மறந் தென்னினைக் கேனே.

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்த யானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன் ஆர்என எம்பெருமான்
நந்தமர் ஊரன் என்றான் நொடித்தான்மலை உத்தமனே.



# கயிலையும் காளத்தியும்

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

**திரு. சொ. சிங்காரவேலன்** M. A., Dip. Ling.

**காளத்தியும் அப்பரும் :**

திருக்காளத்தி மலையில் அன்புக்கொழுந்தாய் உள்ள பரம் பொருளை வழிபட்டார் அப்பர் அடிகள் அங்கு இறைவன் திருமுன் 'அன்பிற்கு எல்லை' யாய் விளங்கும் கண்ணப்பரைக் கண்ணாரக் கண்டார். கையில் வில்லுடன் தனிவீறுடன் அழகும் ஆண்மையும் ததும்ப நிற்கும் அத்திரு வேடர் திருவுருவம் இன்று காண்போரையும் தன்பால் ஈர்த்து நிறுத்தும் இயல்பினதாய் விளங்குகின்றது அருள் உருவாகிய அப்பர் அடிகட்கு அத் திருவுருவம் எத்துணை மெய்ம்மை விளக்கியிருக்கக் கூடும்! அன்பின் வடிவாகத் திகழ்ந்த கண்ணப்பர் திருமேனியைக் கண்டதும் அடிகட்கு உண்டாகிய அநுபவம் கூறுந்தரத்ததன்று. கண்கள் நீர்சொரியத் தலைமேற் கரங்குவித்தபடியே வணங்கி யெழுந்து நின்றார்

" அலைத்து விழும் கண்ணருவி ஆகத்துப் பாய்ந்து இழியத்
தலைக்குவித்த கையினராய்த் தாழ்ந்து "

என்று மிக்க உருக்கத்துடன் அடிகள்மெய்ப்பாட்டைச் சேக்கிழார் விளக்குகின்றார்! கண்ணீர் வெள்ளத்தில் ஆடிய அடிகட்குத் திருக்காளத்தியை விட்டுப் பிரிய மனம் இல்லையாம் அங்கிருந்து திருப்பணிகள் பல புரிந்தவாறு நாள் பல கழிந்தன. நாள் தோறும் 'காதணி வெண் குழையானைக் காளத்திமலைக் கொழுந்தை வேதமொழி மூலத்தை விழுந்திறைஞ்சி எழுந்து பெருங் காதல்புரி மனங்களிப்பப் பரவசமாய்' நின்றார் அடிகள். இங்குத்தான் 'என் கண்ணுளான்' என முடியும் திருத்தாண்டகங்கள் பாடப்பட்டன. 'மனத்தகத்தான்' என்ற திருத்தாண்டகம் குறிப்பிடத்தக்கது. இது சேக்கிழாரால் தெளிவாக்கப்பட்டுள்ளது. 2

**கயிலை யாத்திரை நினைவு :**

இத்தாண்டகத்தை அடிகள் பாடித் திருக்காளத்தி வழிபாடு நிகழ்த்தியபோதே திருக்கயிலை யாத்திரை நினைவு அடிகள் உளத்தில் தோன்றியது. திருக்காளத்தித் திருக்கயிலையையும், காளத்தியப்பர் கயிலையெம்பெருமானையும் அடிகள் திருவுளத்து எழுப்பிடவே அந்தத் தெய்வமாயாத்திரையை மேற்கொள்ள அடிகள் விழைந்தார்.

" சேணிலவு திருமலையில் திருப்பணியா வினைசெய்து
தாணுவினை அம்மலைமேல் தான்பணிந்த குறிப்பினால்
பேணுதிருக் கயிலைமலை வீற்றிருந்த பெருங்கோலம்
காணுமது காதலித்தார் கலைவாய்மைக் காவலனார் "

என்று இதனைச் சேக்கிழார் அழகுறக் கூறுகின்றார் 3 'தாள் பணிந்த குறிப்பினால்' எனவரும் தொடரைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். இந்த வழிபாடே குறிப்புற அடிகட்குத் திருக்கயிலையை நினைவிற் கொணர்ந்தது என்கின்றார் 'தொண்டர்சீர் பரவுவார்.' இங்குப் பாடப்பட்ட திருத்தாண்டகத்தில் இத் திருவுள்ளக் குறிப்பு இருத்தல் வேண்டும். அதனைக் கூர்ந்து நோக்கியே சேக்கிழார் இவ்வாறு வெளிப்படக் கூறினாராதல் வேண்டும். இவ்வாறு திருப்பதிகங்களைக் கூர்ந்து நோக்கி அவற்றது கருத்தை இனிது விளக்குந் திறம் சேக்கிழார் சிறப்பியல் என்பதற்குப் பல சான்றுகள் காட்டலாம். சேக்கிழார் திருக்காளத்தித் திருத்தாண்டகத்தை எவ்வாறு கண்டு பயின்றனர் என்பது சிந்திக்கத்தக்க உண்மையாகும்.

''என் கண்ணுளான்' எனுந் திருத்தாண்டகம் நவின்றார்' என்றார் சேக்கிழார். இத் திருத்தாண்டகப் பதிகம் 'விற்றூண் ஒன்றில்லாத' எனத் தொடங்குகின்றது. 4

**காளத்திப் பதிகத்திற் கயிலைக் குறிப்பு :**

'இறைவன் நல்கூர்ந்தவன்' என்று தொடங்குகின்றது முதற்றிருப்பாட்டு. விற்று உண்பதற்கு ஒன்றும் இல்லாதவன். கச்சிக் கம்பன் அவன். பிச்சையல்லால் மற்று ஊண் ஒன்று இல்லாதவன். மாசதுரன். மயானத்து ஆடும் மைந்தன். மாசு ஒன்று இல்லாத பொற்றூண் போன்ற பேரழகுவடிவம் உடையவன். மாணிக்க மலையாய் உள்ளவன் உலகேழும் தாங்கி நின்ற கற்றூண் அவன். காளத்தியில் தன்னைக் காணுமாறு காட்சி தரும் ணைநாதன். அவன் என் கண்களில் உள்ளான்.

இது முதற்பாட்டின் திரண்டபொருள். இதனுள், 'பேற்றான்', 'மாமணிநற்குன்ற', 'கற்றான்', 'கணநாதன்' என்ற இடங்களில் திருக்கயிலாயக் குறிப்பு நிற்றல் வெளிப்படை. 'காளத்தி காணப்பட்ட கணநாதன்' (காளத்தியிலே தன்னைக் காணுமாறு அருள்புரிந்த, பூதகணங்களுக்கும் பெருந்தலைவனாகிய பெருமான்) என்ற தொடர் மீண்டும் மூன்று, நான்கு ஆகிய இரு பாடல்களிலும் வருகின்றது. 5

'மனத்தகத்தான்' என்ற திருப்பாட்டுத் திருக்கயிலைப்பிரான் திருவோலக்கத்தை இனிது தெளிவாக்கி அடிகள் உள்ளத்தே தோன்றிய அருங்காட்சியை விளக்குகின்றது எனலாம். 'ஏழ் அண்டத்து அப்பாலான்', 'பொருப்பிடையான்' 'கயிலாயத்து உச்சியுள்ளான். காளத்தியான் அவன் என் கண்ணுளானே' என்ற தொடர்களைக் காணலாம். திருக்கயிலைப் பெருமானின் அருளழைப்பு அடிகள் திருச்செவிகளில் விழுந்துவிட்டது: அவனது திருக்காட்சி அடிகள் திருக்கண்களின் முன்னே விரிந்து அருள் ஒளி பரப்பிவிட்டது. அந்த அருளமுதத்தை வாரிவாரி உண்டு வண்டமிழாக அதனை வெளிப்படுத்தும் திறத்தை இங்கு மிக்க வெளிப்படையாக நம்மாற் காணமுடிகின்றது. 'எல்லாம் முன் தோன்றாமே தோன்றினான் காண்' என்று அடுத்த கவிதை எழுகின்றது 6. 'புரிசடைமேற் பாய்கங்கை' வெள்ளம் சுழித்தெழுகின்றது. எரி பவள வண்ணனாய், எங்கு நோக்கினுந் தானாய்த் திருக்கயிலையில் அருள்பாலிக்கும் வெளிப்பாடு பின்னே வரும் திருப்பாட்டில் புலப்படுகின்றது 7. அருச்சுனனோடு திருக்கயிலையில் வேடஉருத் தாங்கி விளையாடிய குறிப்பு மேலே தோன்றுகின்றது அடிகள் திருவுள்ளத்தில். 'ஏழ்கடலும் சூழ் மலையும் ஆயவன்' என்ற நினைவு பின்னே மலர்கின்றது. காளத்திமலைக் காட்சியுடன் திருவண்ணாமலைக் காட்சியும் அடிகள் திருவுள்ளத்துத் திருப்பதிகக் கடைக்காப்புத் திருப்பாட்டில் தோன்றக் காணலாம்.

நஞ்சை யுண்டு உலகங்களைக் காத்த நாதன் அவன். ஊழித் தீ போன்றும் அவன் தோன்றுமியல்பினன். மகிழ்வார் மலர்ந்து காணப் பண் நிறைந்திடப் பலகருவிகளிலும் இசை பரப்புவான். நால்வேதங்களின் பண்பு ஆயவன். அண்ணாமலையில் வீற்றிருக்கும் அண்ணல், அடியார் கூட்டம் அடியிணைகள் தொழுதிட அருள் வழங்கும் கடல். கண்ணாரக் காண்பவர்க்கு ஒப்பற்ற காட்சி வழங்குபவன்' என்கின்றார் பதிக முடிவில். இவ்வழகிய திருப்பாட்டும் அடிகள் திருவுள்ளத்தே மலர்ந்து விரிந்த திருக்கயிலைக்காட்சியாகவே முடிவதைக் காணலாம். திருக்காளத்தி,

திருவண்ணாமலை ஆகிய இரண்டு தென்கயிலாயத் திருத்தலங்கள் அடிகள் திருவுளத்து வடகயிலாயத்தை எழுப்பிய இனிய நினைவை இத்தாண்டகம் உள்ளடக்கி நிற்கின்றது என்று கூறலாம்.

"உண்ணாவரு நஞ்சம் உண்டான்தான்காண்
ஊழித்தீ யன்னான்காண் உகப்பார் காணப்
பண்ணாரப் பல்லியம் பாடி னான்காண்
பயின்றநால் வேதத்தின் பண்பினான்காண்
அண்ணா மலையான்காண் அடியா ரீட்டம்
அடியிணைகள் தொழுதேத்த அருளுவான்காண்
கண்ணாரக் காண்பார்க் கோர் காட்சியான்காண்
காளத்தி யானவன்என் கண்ணுளானே"

திருக்கயிலைக் காட்சி அடிகள் உள்ளத்தே தோன்றினமை, 'கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சியான்' என்பதிற் குறிப்பாகத் தெரிகின்றது. 8.

### காளத்தியில் நக்கீரர் :

நக்கீரர் பாடிய ஒப்பற்ற பனுவலாகிய கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதி' யும் இந்தக் கருத்தொற்றுமையை நினைப்பூட்டுகின்றது. அதன் ஆசிரியராகிய நக்கீரர் அப்பரடிகட்கு முன் வாழ்ந்தவராயினும், பின் வாழ்ந்தவராயினும் அவ்வருளாளர்க்கும் இந்த அருளநுபவம் தோன்றியிருத்தல் கூடும் என்றிடுதலும் தவறாகாது அன்றோ?

### நக்கீரரின் வெண்பா விளக்கு :

'சொல் என்பது திரி; பொருள்தான் ஊற்றும் நெய்; அகல் விளக்கோ என்னுடைய நாக்கு; இப்படி நான் கயிலையில் வீற்றிருக்கும் பெண்பாகர்க்கு 'வெண்பா விளக்கு' ஏற்றியிருக்கின்றேன்; அவனருளைப் பெற்று அவ்வழியே இவ்விளக்கை ஏற்றியிருக்கின்றேன்' என்று நக்கீரர் தம் முதல் திருப்பாட்டில் மொழிகின்றார்; 9

" சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாகச் - சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று "

காளத்தியப்பர் திருமுன் கரங்குவித்துக் கருத்தொருமித்த நக்கீரர் கயிலைமேல் இருந்த அம்மையப்பர்க்கு வெண்பாவிளக்கு ஏற்றுகின்றார். 'ஞானப்பூங் கோதையாள் பாகத்தான்' பெண்பாகனை வியன் கயிலை மேலிருந்த திருக்கோலத்துடன் அவர்க்குக் காட்சி வழங்கியிருத்தல் வேண்டும் என்பது இங்குக் குறிக்கத் தக்கதாகும்.

## அந்தாதி அமைப்பழகு :

ஒரு கவிதை காளத்தியப்பனுக்கும், ஒரு கவிதை கயிலை நாதனுக்குமாக மாறிமாறிக் கனிந்து பாடுகின்றார் நக்கீரர் 10.

'பாசத்தைவிட்டுநின் பாதத்தின் கீழேஎன்
நேசத்தை வைகக நினைகண்டாய் — பாசத்தை
நீககுமா வல்ல கயிலாயா ! நீ என்னைக்
காக்குமா நித்தனையே காண் '

இது கயிலாயப்பிரானுக்கு ஒரு விண்ணப்பம். 11

' வைத்த இருநிதியே ! என்னுடைய வாழ்முதலே !
நித்தலமே ! காளத்தி நீள்சுடரே ! — மொய்த்தொளிசேர்
அக்காலத் தாசை அடிநாயேன் காணுங்கால்
எக்காலத் தெப்பிறவி யான் '

இது காளத்தியப்பனுக்கு ஒரு வேண்டுகோள் 12. இப்படி உளம் கனிவிக்கும் உயர்கவிதைகள் வெண்பா வடிவில் அமுதமென வருகின்றன.

## அருட்குறிப்பு :

கயிலையும் காளத்தியும் கவிதை விளக்கில் கவின் விளங்கும் எழில் இதுவாகும். அப்பரடிகளுக்கும் நக்கீரருக்கும் காளத்தியும்

கயிலையும் தொடர்ந்து நினைவில் நின்று விளைத்த கவிதை அற்புதம் இது. அப்பரடிகள் செய்த திருக்கயிலாய யாத்திரைக்கான அருட்குறிப்பு திருக்காளத்தியில்தான் அவர்க்கு எழுந்தது என்ற மெய்ம்மைவழிச் சிந்தித்தால் விளங்கும் நெறி இதுவே என்று கூறலாம்.

அடிக் குறிப்பு :

1. திருத்தொண்டர் புராணம் - திருநாவுக்கரசர் புராணம்- பா. 346 (சமாசப் பதிப்பு - 1950.)
2. ,, பா. 345
3. ,, பா. 347
4. திருநாவுக்கரசர் தேவாரம், 6 - 8
5. ,, 6 - 8 - 3, 4
6. ,, 6 - 8 - 6
7. ,, 6 - 8 - 8
8. ,, 6 - 8 - 11
9. கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி - (பதினோராம் திருமுறை - காசிமடப்பதிப்பு - 1950) பா-1
10. ,, கயிலை - 1, 3, 5, 7 எனவரும்.
    காளத்தி - 2, 4, 6, 8 எனவரும்.
11. ,, பா. 17
12. ,, பா. 54.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Arunajateswaraswami Devasthanam, Tiruppanandal.

மிக்க மகிழ்ச்சி.

(Sd.) கு. வீராசாமி.
பிரதம நீதிபதி, சென்னை.
19—7—1969.

# அப்பருக்கன்பர்

கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான்,

திரு. வை. சுந்தரேச வாண்டையார்

( மலர் 28, இதழ் 8, பக்கம் 445 இன் தொடர்ச்சி )

அப்பூதி அடிகள் மிக்க மகிழ்ச்சி அடைந்து கூத்தாடினர்; பாடினர். பின் தன் மனைவி மக்களுக்கும் சுற்றத்தார்க்கும் திருநாவுக்கரசர் எழுந்தருளிய நற்செய்தியைத் தெரிவித்து அவர்களை அழைத்துக்கொண்டுவந்து நாயனரைவணங்கும்படிச் செய்தனர். அவரை உள்ளே எழுந்தருளச்செய்து அவருடைய திருவடிகளைத் தூயநீரால் விளக்கினர். அங்ஙனம் செய்த தீர்த்தத்தை அவர்கள் எல்லாரும் தங்கள்மேல் தெளித்து உள்ளம பூரித்தார்கள் அவர்க்குத திருவமுது செய்விக்கவிரும்பி வேண்டினர் அதற்கு அவர் உடன்பட்டருளினர் அறுவகைச் சுவை பயக்கும் கறிவகைகளுடன் இன்னமுது சமைத்தபின் வாழைக் குருத்து அரிந்துவருமபொருட்டு வேருெரு ஆளை அனுப்பாமல் தம்மக்களில மூத்த திருநாவுக்கரசை வாழைக் கொல்லைக்கு அனுப்பினர். எங்கள் சிவபெருமான் எண்குணங் களையுடைய நடராசப் பெருமான் திருவருளை என்னென்பேன். உரை தடுமாறுகிறது. நாக்குக குழறுகிறது. நெஞ்சம் நடுங்கு கிறதே. பையனைப் பாம்புகடிக்க வேண்டுமா?

அப்பூதி அடியாரின் ஆழ்ந்த அடியார் பக்தியை உலகினுக்கு அறிவிக்கவேண்டும் என்ற கருத்தாலே போலும் மூத்த திருநாவுக்கரசு கொய்த குருத்தை வேகத்தோடு கொண்டு ஓடி வந்து தாயார் கையில் நீட்டிக் கீழேவிழுந்து இறந்தான். அது கண்டு பெற்றோர்கள் இது தெரிந்தால் நாயனர் திருவமுது செய்யாரே என்று பாயினுள் வைத்து வீட்டின் பின்புறம் ஒரு பக்கத்தில் மறைத்துவிட்டு, நாயனரைத் திருவமுது செய்தருள வேண்டினர். நாயனரும் எழுந்து கைகால் கழுவிக்கொண்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

அறுசுவையோடு உணவுப்பண்டங்கள் நால்வகை உண்டிகள் படைக்கப்பட, வாகீசர் உண்ண அமர்ந்து அனைவர்க்கும் திருநீறு சாத்தும்போது மூத்ததிருநாவுக்கரசு எங்கே? மனத்தில் ஏதோ தடுமாற்றம் நிகழ்கிறதே எனலும், அப்பூதி அடிகளார் 'இப்போது இங்கு அவன் உதவான்' என்றார். நிகழ்ந்த செய்தியை அறிந்தார் வாகீசர். உடனே பாயில் சுருட்டி வைக்கப்பட்ட உடல் திங்களூர்ச் சிவன்கோயில் முன் கொண்டுவரப்பட்டது. வாகீசர் உடலின் அருகே வந்தார். ஆண்டவனை வினைந்தார். 'ஒன்றுகொலாம்' என்னும் பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினர். உடனே மூத்த திருநாவுக்கரசு உயிர்பெற்று எழுந்து திருநாவுக்கரசு நாயனருடைய திருவடிகளிலே வணங்கினர். திருநாவுக்கரசுப் பெருந்தகையாரும் அவர்க்குத் திருநீறு அளித்தருளினர் தங்கள் மகன் உயிர் பெற்று எழுந்தமைக்கு அப்பூதி அடிகளாரும் அவர் மனைவியாரும் மகிழாமல் நாயனர் திருவமுது செய்யாதிருந்தமையைக் குறித்துச் சிந்தை நொந்தனர். வாகீசர் அதனை அறிந்து அவர்களோடும் வீட்டிற்குச் சென்று அப்பூதி அடிகளார் அவரது பிள்ளைகளுடன் இருக்கத் தாமும் உடனிருந்து திருவமுது செய்தருளினர் பின்னர் எங்கள் வாகீசப்பெருந்தகையார் திருப்பழனத் திருப்பதிகத்தில் பத்தாம்பாசுரத்தில் அப்பூதி அடிகளாரைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

அப்பாசுரம் பின்வருமாறு :

" வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய் கோடியையே "

என்பதாகும்.

இதற்கு விளக்கம் :- இது தலைவி தோழிக்குச் சொல்லியது என்னும் துறை அமைந்தது. தோழியே? என்னை வஞ்சித்து வளைகவர்ந்து சென்றவராகிய திருப்பழனத்து இறைவர் இதுவரை திரும்பி என்னிடம் வந்தார் இலர் அவர் வாராரேயாயினும் அப்பூதி அடிகளார்க்குத் தலையிற் சூடும் பூவாக இருக்கும் திருப்பழனத்து இறைவரது திருவடியில்

ஆராய்ந்து இடும் மலர்களில் ஒதுக்கிய மலர்களையேனும் நான் பெறச் செய்வாயாக என்பது இப்பாடலின் கருத்து.

வஞ்சித்து என் வளைகவர்ந்தான் - காமுற்ற மகளிர்க்கு வளைகழலல், குழல்சரிதல் முதலிய மெய்ப்பாடுகள் நிகழ்வன வாகக் கூறப்படுதலின் தலைவனைக்கண்டு வளைகழலப்பெற்ற தலைவி தன்னை அறியாமலே வளைகழலச் செய்தமை 'வஞ்சித்து வளைகவர்ந்தான்' என்று கூறப்படுகிறது இதே கருத்தைக் குமரகுருபர அடிகளார்,

"வலங்கொண்ட மழுவுடையீர் வளைகொண்டு
விற்பீர்போல் மதுரை மூதூர்க்
குலங்கொண்ட பெய்வளையார் கைவளையெல்
லாங்கொள்ளை கொள்கின் றீராற்
பலங்கொண்ட செட்டுமக்குப் பலித்ததுநன்
முனிரிப் பாவை மார்க்குப்
பொலங்கொண்ட வரிவளைகள் விற்பதற்கோ
கொள்வதற்கோ புறப்பட் டீரே"

என்று நயம்படக் கூறுதல் இங்கு அறியதக்கது.

(தொடரும்)

---

## விசேஷ நாட்கள்

### 10—8—69 முதல் 10—9—69 முடிய

| | |
|---|---|
| 12—8—69 | ஆடி அமாவாசை; கயிலை கண்ட நாள் விழா |
| 15—8—69 | ஆடிப்பூரம்; சுதந்திர தினம் |
| 21—8—69 | குலச்சிறை நாயனர் திருநக்ஷத்திரம் |
| 23—8—69 | குங்கிலியக்கலய நாயனர் திருநக்ஷத்திரம்; [ஆவணிமூலம் |
| 25—8—69 | பிரதோஷம் |
| 27—8—69 | ஆவணி அவிட்டம் |
| 28—8—69 | காயத்ரீஜபம் |
| 2—9—69 | வேளூர்க் கிருத்திகை |
| 8—9—69 | செருத்துணை நாயனர் திருநக்ஷத்திரம் |
| 9—9—69 | பிரதோஷம்; அதிபத்த நாயனர், புகழ்த்துணை நாயனர் திருநக்ஷத்திரங்கள் |
| 10—9—69 | இளையான்குடிமாற நாயனர் திருநக்ஷத்திரம் |

# திருவள்ளுவரும் கச்சியப்ப முனிவரும்

திருக்குறள் வேள்

## திரு. ஜி. வரதராசம் பிள்ளை B. A.,

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் என்பது எல்லோர்க்கும் ஒப்பமுடிந்த கருத்து. அவர் செய்த திருக்குறளாம் தெய்வப் பொதுமறை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருடார்த்தங்களையும் தன்னகத்தே கொண்ட பெருமையுடையது. அஃது அறத்தை மட்டும் பேசவந்த நீதி நூல் அன்று; பொருளைப் பேசவந்த அரசியல் நூல் என்றாலோ அதுவும் அன்று; இன்பத்தை மட்டும் பேச வந்த காமசூத்திரமும் அன்று; இனி, வீட்டினை விளம்பிய ஞானநூல் மட்டும் அன்று. ஆனால் அஃது அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கினைப் பற்றியும் விளங்கக் கூறிய பெருநூலாகும். ஆகவேதான அரசியல் அறிஞரிலிருந்து வீட்டு நெறி கூறிவந்த ஞானியர்வரைத் திருக்குறளில் கண்ட உண்மைப் பொருளை விரித்தும் தொகுத்தும் ஓதி வந்துள்ளனர். அது மட்டும அல்ல. ஞானசாரியர்களாகிய சான்றோர்கள் குறட்பாக்களையே தம் நூல்களில் பொதிந்து வைத்துள்ளனர். சைவசித்தாந்த சாத்திரங்களிலே மிகப் பழைமையான நூலாக விளங்குவன திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் ஆகும். திருக்களிற்றுப்படியார் செய்த ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனர் ஆவர். அவர் உண்மைப் பொருளையும் அதனை அடையும் நெறியையும் காட்டவந்தபோது

"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம் - சார்பு
கெடஒழுகல் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று".

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது - வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால்"

என்று கூறியுள்ளார்.